தானவீரன் கர்ணன்

(நாடகம்)

प्रज्ञानं ब्रह्म

இயற்றியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய

பிற நாடகங்கள்

விரத வீரர் பீஷ்மர்	ரூ.	2-50
ஏகலைவ்யனின் குருபக்தி	...	2-50
ஹரிச்சந்திரன்	...	2-00
தவப்புதல்வர்கள்	...	2-00
வாலிமோட்சம்	...	2-00
பாதுகாபட்டாபிஷேகம்	...	1-75
விபீஷணன் சரணாகதி	...	1-50
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
தபோபலன்	...	1-00
மார்க்கண்டேயன்	...	1-00

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தினின்று வெளிவரும்

தர்ம சக்கரம்

திங்கள் வெளியீடு

வருட சந்தா ரூ. 15-00

அறிவு வளர்ச்சிக்கு—ஆத்மீக முன்னேற்றத்திற்கு—இல்லற வாழ்விற்கு இணையற்ற பொக்கிஷம். விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளுங்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி மாவட்டம்.

தானவீரன் கர்ணன்

(நாடகம்)

இயற்றியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115, எலமனூர் ஸ்டேஷன்
திருச்சி ஜில்லா
1986

LIBRARY
28305

தபோவனத்தொடர் 47

முதல் பதிப்பு	1959
இரண்டாம் பதிப்பு	1966
மூன்றும் பதிப்பு	1978
நான்காம் பதிப்பு	1986

உரிமை பிரசுரிப்பாளருடையது

விலை ரூ. 2-50

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

தானவீரன் கர்ணன்

காட்சி 1

பரசுராமரும் கர்ணனும்

பரசுராமர்: *மாணவா! இன்று நாம் மிகத் தொலைவான இடத்திற்குச் சென்று திரும்பியுள்ளோம். கால்கள் நோகின்றன. இமைகள் மூடுகின்றன. உடல் செய லாற்ற மறுக்கிறது. உள்ளம் அமைதி நிலையை நாடு கிறது.*

கர்ணன்: *குருதேவா! தம் ஏவுதல் ஏதுவாகிலும் அதை சிரத்தால் ஏற்க உறுதி கொண்டுள்ளேன். உத்திரவிட வேண்டுகிறேன்.*

பரசுராமர்: *மாணவா! நானும் எண்ணற்ற மாணவர்கட்கு அஸ்திர வித்தையைக் கற்பித்திருக்கிறேன். ஆயினும் அறிவும், ஆற்றலும், பணிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற உன்னைப் போன்ற மாணுக்கனை இதுவரையில் பெற்ற தில்லை.*

கர்ணன்: *இறைவா, நான் ஏதேனும் வித்தையைப் பெற் றிருக்கிறேனுகில் அது எல்லாம் தங்கள் மகிமையே. தாம் மாணவனைப் புகழ்வது என்னை நாணச் செய்கிறது. தம் உள்ளத்தின் உயர்வே அதற்கு ஏதுவாகும். அக்னி யைச் சார்ந்த விறகுக்கட்டை அக்னியாகத்தானே வேண்டும்!*

பரசுராமர்: *இளைஞா! அங்ஙனம் கூறுவதும் சரி. ஆனால் நான் பொறுமை, அன்பு, பணிவு இவற்றிற்கு மாறுபட்ட சினம், கடுமை, சீற்றம் ஆகிய குணங்கள் நிரம்பப்பெற் றவன் என்பதை அறியாயோ?*

கர்ணன்: (சிறிது கலக்கத்துடன்) சூரியனுடைய ஒளி பெற்று சந்திரன் விளங்குவதில்லையா? சந்திரனுக்கு சுயமாக ஒளி உண்டா? குருதேவருடைய பெருமை தான் என்னிடம் பிரதிபலிப்பதாகத் தாம் காண்கிறீர்.

பரசுராமர்: கதிரவனுடைய ஒளியைத்தான் சந்திரன் பெறுகிறான். ஆயினும் அவ்வொளியிடமிருந்து எரிக்கும் தன்மையை நீக்கிவிட்டுக் குளிர்ச்சியையளித்து மக்களைச் சந்திரன் மகிழ்விக்கிறான். அதைப் போலவே நீயும் என்னிடம் மக்கள் வெறுக்கும் அம்சங்களை நீக்கி உயர் குணங்களை ஏற்று உன் வீரத் தன்மையை விளக்கப் போகிறாய். இது உறுதி.

கர்ணன்: பிரபோ! பெரியோர்கள் பேசுவதெல்லாம் வேத வாக்குகளாகும்; ஆசிகளாகும்; வரங்களாகும்.

பரசுராமர்: (பெருமூச்சு விட்டுக்கொண்டு) கர்ணா! நான் உனக்குப் பிறகு வேறொரு மாணாக்கனுக்கும் கல்வி பயில்விக்கப் போவதில்லை. பல்லாண்டுகட்கு முன்பு மிகச் சிறந்த ஒரு மாணவன் இருந்தான். அவனையும் வெல்லக்கூடிய மாணாக்கன் இருப்பானாவெனப் பல நாட்கள் ஏங்கினேன். இன்று உன்னிடம் அதிகச் சிறப்பைக் கண்டேன். இனி எவனுக்கும் கல்வி பயில்விக்கப் போவதில்லை. உனக்குத் தெரியாத எதுவும் என்னிடம் இனி இல்லை. (சோர்வுடன்) சிறுவா! போதும். சற்றுத் துயில் புரிகிறேன்.

(கீழே தலையை வைத்து உறங்கப்போகிறார்)

கர்ணன்: ஆசார்யா! வேண்டாம். இங்கு தலையணைக்காக வேண்டிய கட்டையில்லை. ஆதலால் தாம் என் தொடையில் சிரத்தை வைத்துத் துயில்புரிய வேண்டுகிறேன்.

பரசுராமர்: சரி.

(துயில்புரிகிருர்.)

கர்ணன்: (தனக்குள்) குருதேவர் நன்ருகத் துயில் புரிகின்ருர். இவருடைய பேச்சு என் உள்ளத்தில் அச்சத்தை ஊட்டுகிறதே. பீஷ்மரைக் குறித்துப் பேசியதும், குருதேவரின் முகத்தில் எவ்வளவு சினக்குறிகள் தென்பட்டன. நான் குருதேவரிடம் பிரம்மாஸ்திரத்தையும் பெற்ருயிற்று. இனி விடை பெற்றுச் செல்ல வேண்டியதுதான். வெண்ணெய் வருகையில் தாழி உடைவதுபோல் இன்று இவருடைய உள்ளத்தில் 'ஆ! என்ன!! தொடைக்கடியில்!!!' பீஷ்மருடைய நினைவு வரவேண்டியது ஏனே? இதுவும் என் விதியோ! ஆ! வலி பொறுக்க முடியவில்லையே! தொடையைக் குடைகிறதே ஒரு பூச்சி. ஆ, ஆ! நசுக்கி எறிந்துவிடட்டுமா! கூடாது, கூடாது. குருதேவரின் துயில் கலைந்துவிடும். இந்த வலியைப் பொறுத்துப் பழகாவிடின் பகைவனுடைய கூரான அம்புகளை எவ்வாறு தாங்குவேன். பார்க்கலாம். உயிரா போய்விடும்!

(பொறுத்துக்கொண்டு பல்லைக் கடித்தவண்ணம் இருக்கிருன். உதிரம் பெருக்கெடுத்தோடுகிறது. பரசுராமருடைய தலையிலும் உதிரம்படுகிறது.)

பரசுராமர்: (அரைத்தூக்கத்தில்) சீடா! என்ன தலையில் ஏதோ நீர்படுகிறதே!

கர்ணன்: (அஞ்சிக்கொண்டு) ஆசார்யரே! ஒன்றும் இல்லை. வியர்வையாயிருக்கலாம். துடைத்துவிடுகிறேன்.

(ஆடையால் துடைக்கிருன்.)

பரசுராமர்: என்னப்பா! துயில் கலைந்து விட்டதே! உன் உடலில் மட்டும் இவ்வளவு வியர்வை ஏற்படக்காரணம் என்ன? மாலை நேரம் தானே!

(எழுகிறார். ரத்தப் பெருக்கைக்கண்டு திகைக்கிறார்.)

மாணவா! என்ன இது? இவ்வளவு உதிரம் பெருகியும் எவ்விதம் நீ பொறுத்துக் கொண்டிருக்கிறாய். உனக்கு வலியேற்படவில்லையா? ஆ! என்ன பொறுமை!!

(ஒரு பூச்சியைக் கைகளால் வீசி எறிகிறார்.)

கர்ணன்: ஆசார்ய தேவா! மன்னியுங்கள். தம் துயில் கெடாதிருக்க வேண்டுமென்ற அவாவினாலேயே இவ்வளவையும் பொறுத்துக் கொண்டிருந்தேன். வலி அதிகம்தான். ஆயினும் பயன் இல்லை. தம் துயிலென்னவோ கலைந்து விட்டது.

பரசுராமர்: உன் பொறுமை என்னைத் திகைக்கச் செய்கிறது. அரக்கர்களும் செய்தற்கரிய செயல்களை ஆற்றி ஓய்ந்து போன எனக்கே வியப்பேற்படுகிறதே! என்னால்கூட இந்த வலியைப் பொறுக்க முடியாதே! என்ன மன உறுதி! அப்பா!! எவ்வாறு இதை நீ பெற்றாய். க்ஷத்திரிய இரத்தம் கலந்தமையினால்தான் எனக்கே இந்தத் திறமை ஏற்பட்டுள்ளது. உனக்கு எப்படிப் பிரம்மதேவன் இவ்வுயர்வையளித்தான்?

கர்ணன்: எல்லாம் தம் அருளினால் தான்!

பரசுராமர்: ஒருநாளும் இல்லை. என் அருளினால் அஸ்திரங்கள் கிடைக்கும். மன உறுதி ஏற்பட முடியாது. (தனக்குள்) பீஷ்மனையும் மீறுவான் போலிருக்கிறதே! அந்தணனுக்கு எவ்வாறு இத்திறன் ஏற்படும்! (வெளிப்

படையாக) மாணுக்கா! எழுந்திரு. முதலில் உன் பெற்ளேரை நேரில் கண்டு மகிழ்ந்தாக வேண்டும். புறப்படு.

(எழுந்திருக்கிருர்.)

கர்ணன் : குருதேவா! அது மிகவும் தொலைவான கிராமம். தாம் அங்குச் செல்ல முடியாது.

பரசுராமர் : மாணவா! இருபத்தொரு முறை பூமியை வலம் வந்துள்ள பரசுராமன் பார்க்காத இடமோ, தொலைவான இடமோ பூவுலகில் இல்லை. முதல் வேலை இது. பிறகு தான் எந்தச் செயலும். புறப்படு.

கர்ணன் : ஆசார்யா! என் பெற்ளேரை நானே நன்ருக அறியேன். தாம் எவ்வாறு அறிய முடியும்?

பரசுராமர் : அவர்கள் நீ சிறுவனுக இருக்கையிலேயே இறந்து விட்டனரா?

கர்ணன் : அதுவும் எனக்குத் தெரியாது.

பரசுராமர் : நீ பொய் பேசுகிருய்.

கர்ணன்: ஆசார்யா! அந்தப் பழக்கத்தையேநான்அறியேன்.

பரசுராமர் : அங்ஙனமாகில் நீ எங்குதான் வளர்ந்தாய்?

கர்ணன் : எவரிடமோ வளர்ந்தேன்.

பரசுராமர் : போகட்டும். நீ அந்தணன் என்று சொன்னுயே, அதாவது உண்மையா?

(பேசாது தலை குனிந்து நிற்கிருன்.)

பரசுராமர் : ஓ! ஓ!! இதுதான் பொய் பேசாத லட்சணமோ! நன்ருய் இருக்கிறதே! இப்பொழுதாவது உண்மையைச் சொல். நீ அந்தணன் என்று உன் உள்ளத்திலாவது நம்பிக்கையுண்டா?

கர்ணன் : நம்பிக்கையில்லை.

பரசுராமர் : பின் ஏன் உறுதியாக அந்தணன் என்று சொன்னாய்? என்னை ஏமாற்றி விட்டாயே! ஐயோ! ஒரு முறை க்ஷத்திரியனான பீஷ்மனிடம் தோல்வியடைந்ததற்காகத் தானே க்ஷத்திரியர்கட்குப் போதிப்பதில்லை என்று ஆணையிட்டேன். என் பிரதிக்ஞை வீணாகி விட்டதே!

கர்ணன் : மன்னிக்கவும்.

பரசுராமர் : சீடா! மன்னிப்பதா? நான் பன்முறை கேட்டும், அந்தணன் என்றே கூறியது ஏன் ? விடையளி. என் சினம் உள்ளத்தில் அடங்காமற் பொங்கியெழுகிறது.

ராகம் : அடாணா தாளம் : ஆதி

(பல்லவி)

நீயும் ஒரு அந்தணன்தானா நிஜந்தானா (நீ)

(அநுபல்லவி)

பொய்யும் புனுகுமே என்னிடம் புகன்றாய்
பையா நீ கற்றதெல்லாம் மெய்யாகிப் போகுமாடா (நீ)

(சரணம்)

பஞ்சை போல வந்து நீயும்
நெஞ்சமதிலுள்ள தெல்லாம்
வஞ்சகமாகக் கற்றதுவும்
ஏனோ உந்தன் கர்மம் தானோ
என்னிடமே யிருந்து உற்றதெல்லாம் அறிந்து
கற்றதெல்லா மறந்து மற்றறப் போகுமடா (நீ)

கர்ணன் : ஆசார்யா! கல்வியைப் பெறுவதற்காக நான் உண்மையை மறைத்தேன். பொய்யையும் கூறினேன்.

உண்மையில் என் பிறவி ரகசியம் எனக்கே தெரியாது. குருதேவே! என் செயலை மன்னித்து எனக்கு விடை கொடுத்தனுப்பி விடக்கோருகிறேன்.

பரசுராமர் : மன்னிப்பா! தன் குரு தக்ஷிணைக்காகவே சமீபத்தில் ஏகலைவ்யன் துரோணருக்குக் கை விரலையிழந்தான். அவனல்லவா மாணக்கன்! நீயும் அவனும் ஒன்றா?.........ஆ, உன்னை நொந்து என்ன பயன்? என் அறிவு எங்குச் சென்றது? என்னையே நொந்து கொள்ளவேண்டும்.

கர்ணன்: குருதேவா! என்னை மன்னித்துவிடுங்கள். நான் ஏகலைவ்யனுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்தவனல்லன். உயிர் முதல் என் வசமுள்ள எந்தப் பொருளையும் குரு தக்ஷிணையாக அளிக்க முடியும். நான் ஒரு சுயநலப் பித்தன் அல்லன். வாழ்வதாயின் ஓர் லக்ஷ்ய புருஷனாக வாழவேண்டும் என்ற ஒரே குறிக்கோள் என் உள்ளத்தில் உள்ளது.

பரசுராமர்: (சினந்தணிந்தவராய்) சீடா! மெச்சினேன், பூமி முழுவதையும் தானமாக அளித்த நானா உன்னிடம் குரு தட்சிணையை வேண்டுவேன். எனக்கு எதிலும் விருப்பமில்லை. சுயநலப்பித்தனல்ல என நீ கூறியது என் உள்ளத்தில் பொங்கிய சினக்கனலை அவித்துவிட்டது. நீ தியாக உணர்ச்சி பெற்று வாழக்கூடும். ஆயினும் வினைப்பயன் எவனைத்தான் விட்டு அகலும்! நீ கண்ணாடியில் காணும் உனது பிம்பம் உன்னைப் போன்று தானே இருக்கிறது! உன் வினைப்பயனும் அத்தகையதே. ஏமாற்றிப் பெற்ற உயர்ந்த அஸ்திரங்கள் உன் உயிருக்குச் சோதனை ஏற்படுங் காலத்தில் மட்டும் உனக்குத் தோன்றா தொழியும்.

கர்ணன்: (அமைதியுடன்) குருதேவா! வணங்குகிறேன். தாய் தந்தையரையும் பிறந்த நாட்டையும் அறியாது வாழ்ந்த எனக்கு விதி அனுகூலமாக இருக்க முடியாது. அதில் எனக்குக் கவலையில்லை. வாழ்வில் பற்றையும் சாவில் வெறுப்பையும் இழந்த என் உள்ளத்தில் பிறருக்கு உதவவேண்டும் என்ற அவா ஒன்றே உளது. நற்காலத்தின் அடையாளமாகத் தாம் அளித்த சாபம் என் சுயநலத்தை மாத்திரம் அழிக்குமேயன்றிப் பிறருக்கு உதவுவதில் தடையைச் செய்யாது. இவ்வுதவிக்காக நான் தமக்கு என்றும் கடமைப்பட்டிருப்பேன். அருள்புரிக.

பரசுராமர்: (கண்களில் நீர் மல்க) மாணவா! உன் பணிவு என்னைக் கவர்ந்து விட்டதே! நான் என்ன செய்வேன்! சொன்ன சொல்லை மாற்ற எனக்கே உரிமையில்லை. வாழ்விலும் சாவிலும் நீ ஆதர்ச புருஷனாக விளங்குவாய். உன் பாக்கியம் அவ்வளவுதான். சென்றுவா.

(பிரிகின்றனர்)

காட்சி 2

வேதியரும் கர்ணனும்

(வேதியர் வீற்றிருக்கக் கர்ணன் எதிரில் நிற்கிறான்.)

கர்ணன்: பெரியோரே! வணக்கம். தீக்குழம்பைக் கக்க இருக்கும் எரிமலையின் அருகில் உள்ளவர் உள்ளம் போல் என் மனம் பதைக்கிறது. என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்து ஓர் பிராயச்சித்தத்தை விதிக்க வேண்டுகின்றேன்.

வேதியர்: (கண்களில் நீர் பெருக) அன்பா! பாலைவனத்தின் மையத்தில் நீரை வேண்டினால் எவர்தான் கொடுக்க முடியும்! நீருள்ள இடத்திற்குப் போகுமாறுதான் சொல்லவேண்டும். மாலுமியை இழந்து நடுக்கடலில் ஊசலாடும் படகைப் போல் என் உள்ளம் பதறுகிறது. கன்றையிழந்து கதறும் பசுவின் துன்பத்தை நீக்க வகையறியாது வாடுகிறேன். எந்தப் பாபி இக்கொடுஞ் செயலைச் செய்தானோ! மனம் வாடியிருக்கும் என்னிடம் நீ உபதேசம் பெறுவதெங்ஙனம்? வேறெங்காவது செல்.

கர்ணன்: ஸ்வாமீ! (நடுக்கத்துடன்) அத்தீச்செயலை ஆற்றிய கயவன்தான் தம்மெதிரில் மன்னிப்பை நாடி நிற்கிறான். வேண்டுமென்றோ, அறிந்தோ அச்செயல் செய்யப்படவில்லை. இருள் நேரத்தில் அக்கன்று என் தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு மாண்டது. என் தாபத்திற்கு எல்லையே இல்லை.

வேதியர்: (சினம் பொங்க) ஆ! நீயா அந்தப் பாபி! எப்படியடா அவ்வளவு கவனக் குறைவு ஏற்பட்டது! உன் போன்றோரிடம் அரசாங்கப்பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டால் என்ன நிலை ஏற்படும்?

கர்ணன்: ஐயா! அறியாமற் செய்து விட்டேன். நான் படும் பச்சாதாபம் ஒன்றே எனக்குப் போதுமான தண்டனையாகும். அறியாது செய்த செயலுக்குப் பிராயச்சித்தம் இல்லையா?

வேதியர்: (இரக்கத்துடன்) அப்பா! உயர் குணங்களைப் பெற்றிருக்கின்றாயே! என் உயிருக்கு நீ தீங்கிழைத்திருந்தாற்கூட மன்னித்திருப்பேன். பேசுமாற்றலற்ற

அப்பசுவின் துயரத்தை என்னுற் பொறுக்க முடிய வில்லையே!

வைஷ்ணவ ஜனதோ என்ற மெட்டு

மாயா உலகில் காயமெடுத்த
மானிடரே கேளுங்கள் (மாயா)

தாயும் சேயும் பிரிந்ததினுலே
சன்மார்க்க மில்லா சிநேகமதாலே
தீய எண்ணம் நிறைந்ததினுலே
தூய உள்ளம் துடிப்பதைப் பாரீர் (மாயா)

வினைப்பயனைப் பெருதிருப்பது எவர்க்கும் முடியாது. நீயும் அதைப் பெறுவாய். இளங்கன்றின் உதிரம் தோய்ந்த அச்சக்கரம் உன் உயிருக்குச் சோதனையேற் படும்போது பூமியில் அழுந்திப் புதைந்து செயலற்றுப் போய் விடும்.

கர்ணன்: ஸ்வாமீ! எந்தச் சாபத்தையும் நான் ஏற்க முடியும். என்னைத் தவத்தீயினுல் எரித்து விடக் கூடாதா? அஃது உயர்வாயிருக்குமே! எல்லோரும் என் வாழ்வின் லட்சியங்களுள் ஒன்ருகிய போர்த் திறனையே அழிக்க முற்படுகின்றீர்களே! வேறு சாபம் அளிக்கக் கூடாதா?

வேதியர்: சொன்ன சொல்லை மாற்றுவதேது? ஆனுல் ஒன்று மட்டும் உறுதி. எத்தவத்தாலும் நீக்க முடியாத இக்கொடும் பசுக் கொலையையும் (கோஹத்தி) சிசுக் கொலையையும் (ப்ருணஹத்தி) நீ செய்தவனுகி விட்டாய். உன் உண்மைப் பச்சாத்தாபமே அதற்கு விமோசனம் அளிக்கும். நீ சிறந்த தியாகியாக விளங்குவாய். சென்று வா.

(போகிருர்)

கர்ணன்: (ஏக்கங்கொண்டவனுய்) ஈசா! இதுவும் ஒரு சோதனையா! முயற்சிக்கும் முட்டுக்கட்டைக்கும் ஏற்பட்டுள்ள போராட்டத்தில் நானு உதாரணமாக அகப்பட்டுக் கொள்ளவேண்டும்? நானு இதற்கு ஆதர்ச புருஷனுக வேண்டும்? பார்க்கலாம். முயற்சியினுல் எவ்வளவு தூரம் முன்னேறக்கூடும் எனப் பார்த்து விடுகிறேன்.

(செல்கிருன்)

காட்சி 3

துர்யோதனனும் கர்ணனும் துரோணரும்

இடம்: விசாலமான மைதானம்.

(துரோணர், அர்ஜுனன், கர்ணன், துர்யோதனன் மற்றும் பலர் வீற்றிருக்கின்றனர்)

துரோணர்: சபையோரே! உங்களுக்கு இதோ ஓர் அறிவிப்பு. உங்கள் மூலமாக வெளியினருக்கும் இதுவே அறிவிப்பாகும். நான் பல்லாண்டுகளாக ஒரு மாணவனைத் தேடிக்கொண்டிருந்தேன். அவனைக் காணுது வருந்தினேன். இன்று அவனைக் கண்டு விட்டேன். நன்கு காய்ச்சிய பொன்னைப்போல், அவனை நன்கு சோதனை செய்து, மன உறுதிபெற்று இன்று வெளிப்படையாக அறிவிக்க முன்வந்தேன். எவனிடம் நான் அதிகமான, அளவிற்கு மீறிய, அன்பைப் பொழிவதாக நீங்கள் குற்றச்சாட்டைக்கூட என்மீது சாட்டினீர்களோ, அதே அர்ஜுனனையே நான் குறிப்பிடுகிறேன்.

எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் அர்ஜுனன் அறிவான். அவனுக்கு நிகரானவரோ, அவனை வெல்லக் கூடியவரோ, உலகிலேயே இல்லையென்பது உறுதி. என் மகன் அச்வத்தாமனுக்கே இது பிரியமாயில்லாமல் இருக்கலாம். உண்மையை நெடுநாளைக்கு மறைத்து வைக்க முடியாது. உண்மையைக் கேட்கச் சிலருக்குப் பிடிக்காது. அதற்கு நான் என்ன செய்வது? சூரிய வெளிச்சத்தையும் காற்றின் பரவுதலையும் எவர் தடை செய்யக்கூடும்?

துர்யோதனன் : (சினத்துடன்) அன்பு அறிஞரையும் குருடராக்கி விடுகிறது. உமது மாணவனை எவ்வளவு வேண்டுமானாலும் புகழலாம். தடையில்லை. வேறெவரும் இல்லையென்று தாம் எவ்விதம் கூறுவீர்கள்?

துரோணர் : இதையே அச்வத்தாமன் பன்முறை என்னிடம் கேட்டிருக்கிறான். நான் அவனுக்குக்கூட இன்னும் பல அஸ்திரங்களை உபதேசிக்கவில்லை.

துர்யோதனன் : ஆசார்யரே! நீர் நன்கு சொன்னீர். பெற்றெடுத்த மகனுக்கே துரோகம் நினைக்கும் நீர் சம்பளம் கொடுக்கும் அரசனுடைய குமாரனுக்குச் சொல்லிக் கொடுக்காமல் இருந்ததில் என்ன விந்தை! உம்மைச் சொல்லி என் செய்வது! புறக்கண்களிலும், அகக்கண்ணான அறிவிலும் குருடரான என் தந்தையைத்தான் திட்டவேண்டும்.

துரோணர்: துர்யோதனா! குருவினுடைய அன்பு செல்வத்தால் பெறக்கூடியதென்று எண்ணி விட்டாயோ? என்ன உன் மடமை! போகட்டும். எங்கே! அர்ஜுனன் காண்பிக்கும் ஒவ்வொரு வில்வித்தையிலும், சரிபாதியை

அவன் காண்பிக்கும் நேரத்தைப் போல் இருபங்கு நேரத்திலாவது நீ செய்து காண்பிக்கக்கூடுமா? எங்கே ஆண்பிள்ளையாகில் முன்வா. பார்க்கலாம்.

துர்யோதனன் : (சினத்துடன்) நான் முதலிலேயே உம்மிட மிருந்த ஒருதலைச்சார்பை அறிந்து, வில்வித்தை பயிலு தலையே விட்டொழித்து விட்டேனே.

துரோணர் : (சிரிப்புடன்) ஓ! ஓ!! கற்றிருந்தால் வேறுவித மாய் இருந்திருப்பாய் போலும்! அப்படித்தானே! என்ன அறியாமை!! சரி. உன் கதாயுதச் சண்டை யிலாவது நீ நிகரற்று இருக்கிறாயா? பார்க்கலாம். பீமனை அழைக்கட்டுமா?

துர்யோதனன்: (அலட்சியப் பார்வையுடன்) கதாயுதப் போரைப்பற்றி உமக்கு என்ன தெரியும்? அதை நான் பலராமருக்கெதிரில் காண்பிப்பேன். அர்ஜுனனுடைய கைத்தேர்ச்சியைப் போல் என் தேர்ச்சியையும் நீர் அங்குக் காண்பீர்.

துரோணர் : மிகச் சரி. அவ்விதமாகில் உனக்குச் சம்மந்த மில்லாத விஷயத்தில் நீ ஏன் வீணைகத் தலையிடுகிறாய்?

துர்யோதனன் : ஏன்? பிறருக்காகப் பேசுவதற்கு இளவர சனை எனக்கு உரிமை கிடையாதா?

துரோணர் : (ஆத்திரத்துடன்) அங்ஙனமாகில் அப்படி யுள்ள ஓர் புருஷனை அழைத்து வந்து என் சொல்லிற்கு மறுப்புக் கூறலாமே!

துர்யோதனன் : இதோ! என் அருகிலேயே இருக்கிறான் அத்தகைய சூரன். கர்ணன் என்ற இவன் பெயரைத் தாம் கேள்விப்பட்டதில்லையா? இவன் அர்ஜுனனுக்கு

எவ்விதத்திலும் தாழ்ந்தவனல்லன் என்பதைத் தாம் மறுக்கக் கூடுமா?

துரோணர் : இவன் யார்? எந்த ஊர்? எவர் மகன்? எவர் மாணுக்கன்? எந்தெந்தப் போர்களில் வெற்றி பெற்றிருக்கிருன்? முதலில் இவற்றிற்கெல்லாம் விடை கொடு.

துர்யோதனன் : இதே ஊர்.........

(சிறிது யோசனை செய்கிருன்)

கர்ணன் : நண்பா! சற்றுப் பேசாதிரு. நான் விடையளிக்கிறேன். பெரியோரே! நான் பாரத வீரன். எங்கோ தோன்றினேன். எங்கோ வளர்ந்தேன். எங்கோ கல்விபயின்றேன். அதைப்பற்றியெல்லாம் ஏன் கூறவேண்டும்? இதோ என் வில். என் அம்புகள். நீங்களே தீர்ப்பளிக்கும் நியாயாதிபதியாக இருக்கலாம். எங்கு வேண்டுமாலும் திறமையைக் காண்பிக்கிறேன்.

துரோணர்: (சிறிது பதட்டத்துடன்) வீர புருஷா! ஏன் இவ்வளவு படபடப்பு! பெரியோரிடம் பணிந்து குலம் கோத்திரம் முதலியவற்றைக் கூறுவது பாரத வீரனின் பண்பல்லவா! மறைக்கக்கூடியது ஏதாவது இருந்தாலும், விரிவாகக் கூறுவதே மேல் எனச் சத்தியகாம ஜாபாலன் கதை விளக்கவில்லையா? கூசாமற் கூறு. இதையறியாது தீர்ப்புக் கூறுவது வீரர் மரபன்று.

துர்யோதனன் : அதைச் சொல்லவேண்டியதில்லை. தோள் வலிமையைப்பற்றி நேரில் பார்த்துத் தீர்ப்புக் கூறுவது தான் உம் வேலை.

கர்ணன்: (தடுத்து) நண்பா! ஆசார்யர் கூறுவதில் நியாயமுளது. அதை நாம் ஏற்கவேண்டும். ஒருமுறை

ஏமாற்றி நான் பட்ட துயரம் போதும். பெரியோரே! தாய் தந்தையரை அறியேன். தேர்ப்பாகச் சதிபதிகள் என் வளர்ப்புப் பெற்றோர்கள். பரசுராமரிடம் கல்வி பயின்றேன். போதுமா? இன்னமும் ஏதாகிலும் விளங்கவேண்டுமா?

துரோணர்: ஆ! என்ன! பரசுராமரின் சீடனா! பீஷ்மருக்குப் பிறகு அவர் எவருக்கும் கல்வி பயில்வித்திருக்க மாட்டாரே!

கர்ணன்: அதைப்பற்றி உங்களுக்கென்ன! கர்ணன், தேர்ப்பாகரில்லத்தில் இருக்கலாம். ஆனால் பரசுராம ருக்கு அவன் ஏன் சிஷ்யன் ஆகலாகாது?

துரோணர்: (தனக்குள்) இஃதென்னடா! தர்மசங்கடமாக வந்துள்ளது! பரசுராமரிடம் கல்வி பயின்ற இவனுடன் அர்ஜுனனை முதல் முதலில் போட்டியிடச் செய்தால் என்பெருமைக்கே இழுக்கு ஏற்பட்டுவிடக் கூடுமே! எவ்விதமாவது இப்பொழுது அர்ஜுனனை விடுவிக்க வேண்டும். பரசுராமர் எப்படிச் சொல்லை மாற்றியிருப் பார்! அதைப்பற்றி நமக்கென்ன! (வெளிப்படையாக) வீரா! தேர்ப்பாகத் தொழிலுக்கேற்ற உன்னுடன் செங்கோலேந்தும் புஜங்களைப் பெற்ற அர்ஜுனன் எவ்விதம் போட்டியிட முன்வருவான்? கர்ணா! நீ உன் தொழிலில் உள்ள தேர்ப்பாகர்க்கிடையில் சமமான வனைத் தேர்ந்தெடுத்து தோள் வலிமையைக் காண்பி. அப்பொழுதுவேண்டுமாகில் நான் தீர்ப்புக்கூற முன் வருவேன். துர்யோதனா! நீயும் ஆட்சிபுரியும் ஒருவனைத் தேடிக்கொண்டுவா. பிறகு அர்ஜுனன் அவனுடன் போராடித் தன் உயர்வை நிலைநாட்டுவான்.

துர்யோதனன்: (சினத்துடன்) ஆ! என்ன குத்தல்! என்ன ஏமாற்றும் சொற்கள். முதலில் பொதுவாகப் பேசி விட்டு இப்பொழுது குறிப்பிட்டுப் பேசியதாகக் கூறு கிறாரே! உண்மை வீரனான கர்ணனுக்கு அவனுடைய தொழில் மட்டும் தடையாக இருக்கலாமா? என்ன அக் கிரமம்! முயற்சியால் இதை வெல்வேன்.

(சிறிது எண்ணிப்பார்த்து)

ஆசார்யரே! இந்தக் கர்ணன் இன்றுமுதல் என் உயிர்த் தோழனானான். என் மூத்த சகோதரனுமானான். அதற் கடையாளமாக என் பங்கில் சேர்ந்துள்ள அங்க ராஜ்யம் முழுவதையும் கர்ணனுக்களித்துள்ளேன். ஆருயிர் நண்பா! இன்று முதல் நீ அங்கநாட்டு மன்னனாகிவிட்டாய். அங்க ராஜனே, நாளைய தினம் உனக்கு அபிஷேகத்தை நடத்தி வைப்பேன். ஆசார்யரே! அங்கநாட்டு மன்னனாக உள்ள கர்ணனுக்கு என்றைக்கும் நாட்டையாள உரிமை பெறக் கூடாத அர்ஜுனன் சமமாக மாட்டான். ஆயினும் உயர்ந்த மனப்பான்மை கொண்ட கர்ணன் அர்ஜுனனைத் தனக்குத் தாழ்ந்தவனாகக் கருதாமல் பந்தயத்தை ஏற்க முன் வந்துள் ளான். ஏன் அர்ஜுனன் முன் வரட்டுமே!

துரோணர்: (தனக்குள்) இஃதேதடா, கிணறு வெட்டப் பூதம் கிளம்புகிறதே! நான் பேசியதனால் கர்ணனுக்கு அரசாங்கமல்லவா கிடைத்து விட்டது! என்னைவிடப் பன்மடங்கு உயர்ந்த பரசுராமருடைய மாணவனான கர்ணனுடன் பதட்டமாக அர்ஜுனனைப் போரிடத் தூண்டக் கூடாது. இதினின்று எவ்விதம் தப்பித்துக் கொள்ளலாம். (வெளிப்படையாக) துர்யோதனா! உன் உதார குணத்தை மெச்சுகிறேன். நட்பைக் குறித்து

வியக்கிறேன். உரிமையாளரான சகோதரருக்குச் சிறு பகுதியையும் கொடுக்க விரும்பாத நீ நட்பில் இவ் விதம் கடமைப்பட்டிருக்கிருய் என்பது விந்தையே. ஆயினும் அரசனுக்கப்பட்ட கர்ணனை நீ க்ஷத்திரிய னுக்கிவிட முடியுமா?

துர்யோதனன்: (உரத்த குரலில்) ஏனையா? நினைத்து நினைத் துப் பேசுகிறீர்! அரசனயிருக்கவேண்டும் என்றீர். அரசனுக்கினேன். இப்பொழுது க்ஷத்திரியனுக்க வேண்டுமென்கிறீர். அதுவும் ஆக்கிவிட்டால் மேலும் என்ன செய்வீர்?

துரோணர்: அப்பா! நீ சிறு குழந்தை. பதட்டப்படுகிருய். அந்தணனை பரசுராமன் க்ஷத்திரியரான பீஷ்மரிடம் தோல்வியடையவில்லையா? யானை மிகவும் வலிமை யுடைய விலங்கென்று கூறினல், மலையுடன் மோதிக் கொள்ளட்டும் என்று சொல்வதைப் போலிருக்கிறதே உன்பேச்சு. வேண்டுமானல் தேர்ப்பாகரினத்தைச் சேர்ந்த அரசர்களுள் கர்ணன் சிறந்த வீரனக இருக்க லாம். அதற்காக அர்ஜுனனுடன் போட்டியிட முடி யுமா? நான் மற்ற குருகுலப் பெரியார்கட்கு விடை யளிக்க வேண்டாமா? வீண் பேச்செதற்கு? க்ஷத்திரிய னயும் அரசனயும் உள்ள ஒருவனுடன்தான் அர்ஜுனன் எதிர்த்து நிற்பான்.

கர்ணன்: நண்பா! நான் சொல்வதைச் சிறிது கேள். பிறவி உண்மையை அறியாததற்காகவும், தேர்ப்பாகர் இல்லத் தில் வளர்ந்தமைக்காகவும், என்றும் சிரத்தைத் தாழ்த் தியதில்லை; வருந்தியதில்லை. பிறவி எடுத்தமைக்கு நான் பொறுப்பாளியன்று. ஆனல் 'முயற்சியினல் எதை யும் பெற்றுவிடலாம். விதியுடன் போரிடலாம்' என்ற

கொள்கையை என்றும் கடைப்பிடித்து வந்தேன். முடிவைப்பற்றிய கவலை எனக்கில்லை. முயல்வதற்குத்தான் எனக்கு உரிமையுண்டு. ஆயினும் இவ்வுலகில் தாழ்விற்குக் காரணமாகக் கருதப்படும் தேர்ப்பாகன் நிலையை நீக்கி என்னை அரசனுக்கிய உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்! என் உயிர், உடல், உரிமை அனைத்தையும் உன்னுடையது ஆக்கினேன். நீ செல்லும் பாதை எவ்வாருயிருப்பினும் அதுவே என் பாதையாகும்.

துர்யோதனன்: நண்பா! போதும் போதும். நான் செய்த அற்ப உதவியைப் புகழாதே.

கர்ணன். தோழா! அரசாங்கத்திற்காகவல்ல நான் புகழ்வது. அதைக் கொடுக்கத் தூண்டிய மனப்பான்மைக்காகவே நான் புகழ்ந்தேன். ஆயிரம் அரசாங்கங்களைப் பெற முடியும். ஆனால் உன்போன்ற நண்பனை வேறெங்கும் பெறேன்.

துர்யோதனன்: கர்ணு, கடலில் தவிக்கும் கப்பலுக்கு தீபஸ்தம்பம் போல் நீ எனக்குக் கிடைத்தாயே, அஃது ஒன்றே போதும். இனி நிம்மதியாக நான் வாழ்வேன்.

(கண்ணீர் விடுகிருன்.)

கர்ணன்: நண்பா! வருந்தாதே, உன் மனதில் உள்ளதை நான் அறிந்துகொண்டேன். உன்னுல் வெறுக்கப்படும் அப்பகைவனிடம், எனக்கும் ஏனே காரணம் இன்றியே ஒரு போட்டியுணர்ச்சி ஏற்பட்டு விட்டது. இரு போட்டித் தலைமை யானைகள் ஒரே காட்டில் நிம்மதியுடன் வாழ முடியுமா? நானும் அவனும் சேர்ந்து பூமியில் வாழ

முடியாது! வாரும். செல்லலாம். சமயத்தில் அர்ஜுனனை எதிர்த்து நிற்பேன்.

(இருவரும் செல்கின்றனர்.)

துரோணர் : நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் மற்றொன்றை எண்ணுகிறதே! வெடி மருந்துச் சாலையில் தீ வைத்த பிறகு அது வெடிக்காது எவ்வாறு ஓய்வு பெறும்? கடவுள் சித்தப்படி நடைபெறட்டும்.

(செல்கிறார்.)

காட்சி 4.

துர்யோதனனின் அந்தப்புரம்

(பானுமதி தேவியும் கர்ணனும் எதிரெதிராக உட்கார்ந்து சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கின்றனர்.)

பானுமதி : அண்ணா! என்ன, எல்லாக் கலைகளிலும் ஆடவரே தேர்ந்தவர் என்பது தம் எண்ணமோ!

கர்ணன் : சகோதரி! யார் அப்படிச் சொல்லியது? சக்தியின்றேல், சிவம் சவம் போன்றது தானே.

பானுமதி : இப்படிப் பேசிப் பேசி அறியாத பேதைகளை ஏமாற்றுவது ஆடவருக்கென்றேற்பட்ட சூழ்ச்சிதானே.

கர்ணன் : ஆம், ஆம், (காய்களை நகர்த்திய வண்ணம்) தோல்வி ஏற்படும் எனத் தோன்றி விட்டால், சூழ்ச்சி முதலிய சொற்களையடுக்குவது பெண்டிரின் இயற்கையன்றோ! ஆட்டத்தைக் கவனி. எவ்வாறு தப்புவாய்?

பானுமதி : ஏன்! இதோ தப்பினேன். (காய்களை நகர்த்தப் பார்க்கிறாள்.) எல்லா இடங்களிலும் தடையிருக்கிறதே, பார்க்கலாம்,

(கர்ணனுடைய பின்புறத்து வாயிலின் வழியாக துர்யோதன மன்னன் சந்தடியின்றி நுழைகிறான். பானுமதி பார்த்து விடுகிறாள். திடுக்கிட்டுப் பதைபதைத்து எழுந்திருக்கிறாள்.)

கர்ணன் : (சிரித்துக்கொண்டே) தப்பும் வழி சிறந்த வழியாகவல்லவோ இருக்கிறது.

(ஆடைத் தலைப்பைப் பிடித்திழுக்கிறான். விரைந்து பானுமதி பிடுங்கிக்கொள்கிறாள். இடுப்பில் கட்டியிருந்த முத்து மாலை அறுந்து விழுகிறது. முத்துக்கள் நான்கு புறங்களிலும் சிதறி ஓடுகின்றன.)

கர்ணன் : (திகைப்புற்றவாறு) மன்னிக்கவும். தங்கையே இது வரம்பு மீறிய செயல். நான் இதோ மாலையை ஒழுங்குபடுத்தி விடுகிறேன்.

(நூலில் முத்துக்களைச் சேர்க்க முயலுகிறான். பானுமதி நடுங்கிய வண்ணம் பேசாது நிற்கிறாள்.)

துர்யோதனன் : (நடுவில் நின்று) நண்பா! பேசாதிரு. நான் மாலையைச் சீர்ப்படுத்தி விடுகிறேன். நீ ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடு. (மனைவியைப் பார்த்து) நன்றாயிருக்கிறது! தோல்வியுற்றால் ஓடிவிடுவதுதான் பாரத அரசியின் லட்சணமோ? உட்கார்ந்து வெற்றி கிட்டும் வரை ஆடவேண்டும்.

(கைகளைப் பிடித்து உட்காரச் செய்கிறான். கர்ணன் துர்யோதனனைப் பார்த்துப் பேச்சற்றுப் பதுமைபோல் நின்று விடுகிறான்.)

நண்பா! ஏன் பேசாது திகைத்து நிற்கின்றாய்? என் மனைவி விளையாட்டின் நடுவில் எழுந்தமைக்காகச் சினமோ? அவளுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன்.

(கர்ணனை உட்கார வைக்கிறான்.)

கர்ணன் : நண்பா! என்னையும் மன்னிப்பாயா? வந்ததும் உன்னைக் காணாது தனிமையில் ஆடிக்கொண்டிருந்த தேவியுடன் கூசாது ஆடினேன். ஆட்டவெறியில் அறிவை இழந்தேன். உன்னைக் கண்டு எழுந்த தேவியை, தோல்விக்காக எழுந்ததாக எண்ணி வரம்பு மீறிச் சேலையின் தலைப்பைப் பிடித்து இழுத்தேன். முத்துக்கள் உதிர்ந்தன. என் கையைத் துண்டித்துவிடு.

துர்யோதனன் : (சிறிது சினத்துடன்) என்ன சொன்னாய்? இதுதான் நட்பின் அறிகுறியோ? அண்ணனுக்கும் தங்கைக்கும் இந்த உரிமையைக் கூட மறுப்பதற்கு நான் என்ன ஓர் அறிவிலியா?

கர்ணன் : (கண்களில் நீரைப் பெருக்கியவாறு) என் நாவு பேச மறுக்கிறது.

துர்யோதனன் : ஓ! ஓ! நண்பனென்ற முறையில் உன் இல்லத்தில் தடையின்றி நான் நுழைவதைத்தடைசெய்யும் நோக்கமாகில் வெளிப்படையாகச் சொல்லி விடு.

கர்ணன் : நண்பா! உன் உயர்குணம் என்னை என்ன வெல்லாமோ செய்கிறது. நான் பிரம்மானந்த நிலையில் இருக்கின்றேன். என்றென்றைக்கும், எவராவது உன் போன்ற நண்பரைக் கண்டிருக்கக் கூடுமா?

துர்யோதனன் : (சிரித்த வண்ணம்) நண்பா! நட்பு என்றால் ஒரே விதமாகத்தான் இருக்க முடியும். உயர்வு தாழ்வு அதில் இருக்க முடியாது. தாழ்ந்திருக்குமாகில் அது நட்பாகாது. நட்பு, பகை இரண்டிலும் நான் உயர்வை அல்லாது மையத்தையோ, தாழ்வையோ மனதிற் கொள்வதேயில்லை. போதும். இதைப்பற்றிப் பேசாதே. நமக்கு அரசாங்க வேலையிருக்கிறது. எனக்காக இன்று

பானுமதியை ஒப்பந்தத்திலிருந்து விடுவித்து விடு. நாம் செல்லலாம்.

(பானுமதி செல்கிறுள்.)

கர்ணன் : நண்பா! அழியாவரம் பெற்ற நட்புதெய்வத் திற்கு இன்று அமிர்தபானமும் கிடைத்து விட்டது. எப்பேர்ப்பட்ட, தவிர்க்க முடியாத் சந்தர்ப்பங்கள் ஏற் பட்டாலும் நம் இருவருடைய நட்பு சீர்கெடாதிருக்கும். இது உறுதி. உன் லக்ஷியமே என் லக்ஷியம். என் தனி லக்ஷ்யத்தைக்கூட உனக்காக விட்டுக் கொடுக்கத் தயங்கேன். இது சத்தியம்.

துர்யோதனன் : இந்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? செல்வோம்.

(செல்கின்றனர்.)

காட்சி 5

கர்ணனும் சூரியனும்

(கர்ணன் பூஜையறையில் அமர்ந்து மூடிய கண்களுடன் தியானம் செய்து கொண்டிருக்கிறுன். சூரிய பகவான் மானிட உருவத்தில் எதிரில் நிற்கிறுர்.)

கர்ணன்: (கண்களைத் திறந்ததும்) பெரியோரே! வணங்கு கிறேன். ஆசிமொழிகளை அருளவேண்டும்.

சூரியன்: குழந்தாய்! நீ நிகரற்ற தியாக வீர புருஷனுக விளங்கப் போகிருய்.

கர்ணன்: ஆஸனத்தில் அமரவேண்டுகிறேன். தாம் யாரென் பதை அறிவிக்கக்கூடுமோ?

சூரியன்: (ஆவலுடன்) மைந்தா! நீ என் அருகில் வா. உன் உயர் அவயவங்களின் ஸ்பர்சத்தால் எனக்கு இன்பமூட்டு.

(கைகளைப் பிடித்து முதுகில் தடவுகிறார்.)

கர்ணன்: எவரிடமும் பெறாத இந்த அன்பு மொழிகள் என் செவிகளில் தேனாறாகப் பாய்ந்து இன்பமூட்டு கின்றன. காரணமின்றி அன்பைப் பொழியும் தாம் யாரென நான் அறியக்கூடுமா?

சூரியன்: மைந்தா! காரணமின்றி காரியம் ஏற்படாதென் பதை உறுதியாக நம்பு. சில இடங்களில் சில நேரங் களில் காரணங்கள் நமக்கு விளங்காதிருக்கலாம். ஆனால் காரணங்கள் இருந்தே தீரவேண்டும். கடவுளை நாம் அறிய முடிவதில்லை. ஆனால் காரியமான உலகம் காரணமான கடவுளில்லாமல் ஏற்பட முடியாதென்றே நாம் கடவுள் இருப்பதை ஏற்கிறோமல்லவா? அதைப் போலவே இதிலும் காரணமிருக்கிறது.

கர்ணன்: அதை நான் அறிவதற்கு உரிமையுண்டா?

சூரியன்: அஃதின்றேல் என் காட்சி உனக்கு ஏற்பட் டிருக்காது.

கர்ணன்: அங்ஙனமானால் அருள்புரிக!

சூரியன்: கர்ணா! நான் யாரென்பதை முடிவில் நீ அறிவாய். அதுவரையில் நீ எதையும் வினவாதே.

கர்ணன்: உத்தரவு.

சூரியன்: முதலில் நான் கேட்கும் கேள்விகளுக்கு விடை பகர்வாய்.

கர்ணன்: அப்படியே.

சூரியன்: உன்னிடம் மற்றவரிடமிருந்து பிரிக்கும் வேற்றுமை எதையாவது காண்கிருயா?

கர்ணன்: ஒன்றல்ல, பலவற்றைக் காண்கிறேன்.

சூரியன்: ஒவ்வொன்ருகக் கூறுவாயாக.

கர்ணன்: என் செவிகளில் குண்டலங்களை அணிவதற்கு அவசியமின்றி இயற்கையாக இரண்டு குண்டலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சூரியன்: ஒன்று. பிறகு?

கர்ணன்: என் உடலின் மேல் தோல் பிறருடையதை விட மிகக் கடினமாகவும் மிருதுத்தன்மை இழந்ததாகவும் தோன்றுகிறது.

சூரியன்: சரி, இரண்டு. பிறகு?

கர்ணன்: இவைதான் விளக்க முடியாத இரு சிறப்புகளோ, தாழ்வுகளோ. மற்றவை, என் தீவினைப்பயன்களால் ஆனவை. அவற்றைச் சொல்லித் தம் திருவுள்ளத்தை ஏன் புண்படுத்த வேண்டும்?

சூரியன்: என்னிடம் எதையும் மறைக்காதே. நான் அறியாதது ஒன்றுமில்லை.

கர்ணன்: என் தாய் தந்தையர் கல்நெஞ்சம் படைத்தவராய் இருத்தல் வேண்டும்.

சூரியன்: சிவ, சிவ. ஏன் அப்படிக் கூறுகிருய்?

கர்ணன்: இளமையிலேயே தாய் தந்தையரால் புறக்கணிக்கப்பட்டு வளர்ப்புப் பெற்ருரால் வளர்க்கப்பட்டு வந்தேன்.

சூரியன்: உண்மைதான். பிறகு?

கர்ணன்: தெய்வ உதவியை என்றும் இழந்து வந்தேன்.

சூரியன்: அதுவும் உன் புகழிற்காகவே.

கர்ணன்: ஜாதி, தொழில், பெற்றோரை அறியாமை இவற்றால் சிறுமையுற்றேன்.

சூரியன்: விளக்கு அருகில் இருந்தும் சுவர் தடைசெய்தால் ஒளி எவ்வாறு கிட்டும்?

கர்ணன்: காரணம் ஏதும் இன்றி ஓர் உயர்ந்த வாலிப வீரன்மேல் மாற்றமுடியாத பகைமை கொண்டேன்.

சூரியன்: கதிரவனைக் கண்டதும், சூரிய காந்தக்கல் தீயைக் கக்குவதில் யாது விந்தையுளது?

கர்ணன்: காரணம் ஏதும் இன்றி ஓர் உயர்ந்த வாலிப வீரனின் அழியா நட்பைப் பெற்றுள்ளேன்.

சூரியன்: பிறகு?

கர்ணன்: வேறொன்றும் இல்லை. அந்த நட்புதான் பாலை வனத்தையொத்த என் வாழ்க்கையில் ஒரு கனவுச் சோலையைப்போல் திகழ்கிறது.

சூரியன்: நண்பனுடைய செயல்கள் நியாயமானவை என்று நீ ஏற்கிறாயா? அல்லது அவனைத் தடுத்துத் திருப்புகின்றாயா?

கர்ணன்: நண்பனுடைய தன்மையை நான் நன்கு அறிவேன். மும்மூர்த்திகளும் சேர்ந்துவரினும் அவனுடைய உள்ளத்தில் தோன்றியதை மாற்றமுடியாது. அவனிடமுள்ள சிறந்த பல குணங்கட்கிடையில் பங்காளிப்பகை மிகுந்து காண்கிறது. ஆனால் தாமரை இலை தண்ணீர்ப் பசையை ஏற்காதிருப்பதைப் போலவும், ஸ்படிகக்கல்,

அருகிலுள்ள பொருளின் நிறத்தை ஏற்பதைப்போலவும், பற்றின்றி, நான் அவனைப் பின் தொடருகிறேன்.

சூரியன்: அதே மாதிரி நீ இருந்துவிடு. சிறந்து விளங்குவாய்.

கர்ணன்: என் நண்பனுடைய சிறந்த பகைவனை ஒருவனை மாத்திரம் நானும் வெறுக்கிறேன்.

சூரியன்: என்ன செய்யலாம்? அது விதியின் திருவிளையாடல். எனக்கும் உனக்கும் நடக்கும் இந்த சம்பாஷணையை உன் நண்பனல்ல, மனைவியல்ல, எவருக்கும் வெளியிடக்கூடாது. ஆணையிடுவாயா?

கர்ணன்: அவசியமில்லை. பொய் பேசுவதில்லை. ஆதலால் சொல்லே போதுமானது.

சூரியன்: மைந்தா! ஓர் உயர்ந்த க்ஷத்திரியப் பெண் குந்தி என்பவள் ஓர் உயர்ந்த மந்திரத்தால் கதிரவனைச் சேவித்தாள். அவளிடம் மகிழ்ந்த நான் பெண்களுக்குப் பிரியமான ஓர் மைந்தனையளித்து விட்டேன். என் அம்சம் பெற்றவன் என்பதற்காக அவனுடைய உடலில் எந்த ஆயுதங்களாலும் பிளக்க முடியாத இயற்கைக் கவசம் ஒன்றையும், அழகிற்காக இரு குண்டலங்களையும் அளித்தேன்.

கர்ணன்: ஐயா! நான்தானா அந்தப் பாக்கியமற்றவன்?

சூரியன்: பொறு. நீயேதான், உன் அன்னையை நொந்து கொள்வதில் யாதொரு பயனும் இல்லை. அப்பேதைக்குச் சமூகத்தினிடமிருந்த அச்சமே அதற்குக் காரணம். அவளுக்கு நல்லறிவு புகட்டுவதற்கு எவரும் இல்லை.

கர்ணன் : விதியைத் தவிர எவரையும் நான் நோவதில்லை. அத்துடன், முயற்சியுள்ளவரை போராடவும் தயங்கேன்.

சூரியன் : உன்னுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்தில் மிகவும் ஈடுபட்டிருக்கிறேன். உலகம் மெச்சும் ஆதர்ச புருஷனாக நீ பிரகாசிக்கவேண்டும் என்பது என் ஆசி.

கர்ணன் : உயர் தந்தையே! தம் ஆசிமொழிக்கு என்றும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். தம் ஆசிக்கேற்ற விதம் நான் நடப்பேன்.

சூரியன் : உனக்குச் சில எச்சரிக்கைகளை அளிக்கவே நான் வந்திருக்கிறேன்.

கர்ணன் : தந்தையே! என் கொள்கைகளுக்கு மாறுபடா திருக்கும் வரையில் அந்த எச்சரிக்கைகளை நான் பின் பற்றுவேன்.

சூரியன் : சுவற்றை வைத்துக்கொண்டல்லவா சித்திரம் வரையவேண்டும்! உன் உடலைக் காக்க வேண்டியது முக்கியம்.

கர்ணன் : சித்திரக்கலையில் உண்மைப் பற்றுள்ளவர்கள் சில நேரங்களில் சுவரை இடிக்கத் துணிவர்.

சூரியன் : நீ மிகவும் பகைக்கும் அர்ஜுனனுடன் உனக்கு உள்ள உறவு என்ன என்பது தெரிந்ததா?

கர்ணன் : நன்கு அறிந்தேன். அதற்காக வருந்துகிறேன். என் மனதை அந்தப் பகைமையிலிருந்து திருப்ப முடி யாத நிலையில் இருக்கிறேன். நீங்களும் சந்திரனும் வானில் சேர்ந்து வாழ முடிகிறதா? சொல்லுங்கள்.

சூரியன் : உன் எதிரிக்கு தெய்வபலம் முற்றிலும் அனுகூல மாக இருக்கிறது. ஆயினும் என் உதவியினாலும், உன் முயற்சியினாலும் நீ அவனை வெல்லக்கூடும்.

கர்ணன் : நன்றி.

சூரியன் : நீ எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். எவர் எதைக் கேட்டாலும் கொடுப்பதென்ற கடுமையான விரதம் எடுத்துக்கொண்டிருக்கிறாய். உன் உடல் கவசத்தையும் காதின் குண்டலங்களையும் மாத்திரம் கொடுத்து விடாதே.

கர்ணன் : அவற்றை அணிந்துள்ள உடலையே பிறர்க்கு அளிப்பதற்கு நான் தயங்கமாட்டேன். மன்னிக்கவும்.

சூரியன் : நான் வேறு என்ன சொல்ல முடியும்! எவர் உன்னிடம் இதைக் கேட்டாலும் அவர் தேவாம்சம் கொண்டவர் என்று உறுதியாக நம்பு. அவரிடம் எதிரியைக் கொல்லும் ஓர் வேலாயுதத்தைப் பெற்றுக்கொள்ள மறந்து விடாதே.

கர்ணன் : அங்ஙனமே ஆகட்டும்.

சூரியன் : நம்முடைய இந்தப் பேச்சு கனவில் நடந்ததாக உனக்குத் தோன்றும். ஆனால் இதை உண்மையென்று நம்பு.

(கர்ணன் வணங்குகிறான். சூரியன் மறைகிறான்.)

காட்சி 6.

கர்ணனும் இந்திரனும்

(கர்ணன் ஆஸனத்தில் வீற்றிருக்கிறான். காவலன் அருகில் நிற்கிறான்.)

கர்ணன்: காவலா! நேரமாயிற்றே. ஒரு யாசகரையும் காணோமே. இன்று தானமே செய்யாமலா எழுவது?

காவலன்: பிரபுவே! யாசகன் வராவிட்டால் போகட்டும். உங்கள் ஆயுள் முழுதும் யாசகனே வராவிடினும் குறை ஏற்படாது. அவ்வளவு பொருள்களை நீங்கள் கொடுத்தாயிற்று. வீணான விரதத்தை அல்லவா ஏற்றுக் கொண்டு துன்பப்படுகிறீர்கள்.

கர்ணன்: என்ன சொன்னாய்! நன்றாக உளது! பிறர் சொல்லியா நான் விரதம் ஏற்றேன்! தெரிந்து ஆராய்ந்து செய்த செயலிற்காக எவராவது வருந்துவது உண்டா?

காவலன்: பிரபுவே! எவர் எதைக் கேட்டாலும் கொடுக்கும் விரதம் ஏற்றவரை அறிவேன். கேட்பவரில்லாமைக்காக உண்ணாவிரதம் ஏற்றுள்ள தம்மைப் போன்ற எவரையுமே கேள்விப்பட்டதில்லை.

கர்ணன்: ஒரு நுட்பமான உண்மையை விவரிக்கிறேன். உயிரே போயினும் பிறரிடம் கேட்பதையறியாத மானிடர்கள் நிறைந்தது நம் நாடு. நான் இந்தக் கொடுக்கும் விரதத்தை ஏற்றுக்கொண்டமையினால்தான், எந்த மூலை முடுக்குகளில் எவர் இல்லாமையினால் வருந்துகின்றனர் என்பதை நம் அதிகாரிகள் தேட முயலுகின்றனர்.

காவலன்: தலைவா! இவ்விதம் செய்வதற்குக் கற்பக மரம், காமதேனு, சிந்தாமணி அல்லவோ வேண்டும்! இந்த அரசாங்கம் எவ்வளவு காலத்திற்குத் தாங்கும்!

கர்ணன்: உண்மை ஊழியா! என்ன, வம்ச பரம்பரையாக வந்த அரசாங்கம் அழிந்துவிடும் என்று அஞ்சுகிறாயா?

காவலன்: இல்லை பிரபுவே. தாழ்வினின்று உயர்விற்கு ஏகலாம். உயர்நிலையினின்று தாழ்விற்கு வர எவரால் முடியும்!

கர்ணன்: உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைக்கு மனப் பான்மையே காரணம். நீங்கள், ஏன்! உலகமே என் றென்றும் திகைத்துப் போகும்படியான தானமொன் றைச் செய்து ஆதர்சனை என்று ஆவேனே! எம்பிரான் அந்த விருப்பத்தை என்று நிறைவேற்றுவானே!

காவலன்: சந்ததிகட்கு இந்த அரசாங்கம் இருக்கவேண் டும் என்பதும் நினைவிலிருக்கட்டும்.

கர்ணன்: என் புகழ்தான் அவர்களின் அழியாச் செல்வம்.

காவலன்: (தனக்குள்) நிறுத்த முயன்றால் விசை அதிகமாக வல்லவோ மாறுகிறது! மௌனமாயிருத்தலே உயர்வு.

(பேசாது தலைகுனிந்த வண்ணம் நிற்கிறான்.)

கர்ணன்: காவலா! எவராகிலும் வந்திருக்கிறாரென்று சென்று பார்.

(காவலன் சென்று ஒரு முதிய வேதியருடன் நுழைகிறான்.)

கர்ணன்: (பரபரப்புடன் எழுந்து) ஐயா! இந்தத் தள் ளாத வயதில் ஏன் இவ்வளவுதூரம் நடந்து வந்தீர்கள்? இருக்குமிடத்திலிருந்து சொல்லியனுப்பியிருந்தால் நானே நேரில் வந்து தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி யிருக்கமாட்டேனா?

வேதியர்: சரி, சரி, போதும். இவ்வளவு கஷ்டத்துடன் வந்த பிறகு வெறுங்கையுடன் திருப்பியனுப்பாமல் இருந்தால் அதுவே போதும்.

காவலன்: என்ன சொன்னீர்? எம் தலைவனையும் மற்ற வருடன் ஒப்பிட்டு விட்டீரோ! நீர் வரவில்லையென்று இன்னமும் உண்ணாது இருக்கிறார் பிரபு.

வேதியர்: இருக்கலாம் அப்பா. என்னுடைய அனுபவத்தைச் சொன்னேன்.

கர்ணன்: பெரியோரே! வீண் பேச்சு வேண்டாம். தாம் விரும்பியது எதுவாகிலும் அதைப் பெற்றுச் செல்லலாம்.

காவலன்: உடல், பொருள், ஆவியென்பார்களே! அவைகளுள் எதை வேண்டுமானாலும் பிரபு கொடுத்து விடுவார்.

வேதியர்: அங்ஙனமாகில், இன்று என் விருப்பம் நிறைவேறுவது உறுதியெனக் கொள்ளலாமா?

கர்ணன்: கேட்கலாம்.

வேதியர்: இந்தக் காவலனைச் சிறிது வெளியே அனுப்பிவை. நான் தனிமையில் பேச விரும்புகிறேன்.

கர்ணன்: இவன் நம்பிக்கைக்கு ஏற்றவனே. ஆயினும் தாம் விரும்பிய விதமே அனுப்பி விடுகிறேன். காவலா! வெளியேகிவிடு.

காவலன்: பிரபோ! கவனத்துடன் இருங்கள். புதிய முறையைச் சேர்ந்தவராயிருக்கிறார் இந்த யாசகர்.

(செல்கிறான்)

வேதியர்: கர்ணா! என்முறை புதியதாகத் தோன்றலாம்.

கர்ணன்: எம்பெருமான் படைத்த உலகில் ஒன்று மற்றதைப்போல் இருக்கிறதில்லை. இதில் எனக்கு வியப்பு ஏற்படவில்லை.

வேதியர்: நீ என்னைச் சாதாரண யாசகனாகவே கருதுகிறாயோ?

கர்ணன்: எல்லாப் பொருள்களையும் ஒரே மாதிரியாகக் கருதும் எனக்கு எல்லா யாசகரிடமும் வேற்றுமை எண்ணம் கிடையாது. நீவீர் விரும்பியது யாதாகிலும் அது கிடைக்கும்.

வேதியர்: நான் தயக்கமின்றிக் கேட்கலாமா?

கர்ணன்: தயங்காமல் கேளுங்கள். என்னிடம் இருப்பது எதுவாயினும் அது தங்களுக்குச் சொந்தம்.

வேதியர்: உன் உடலில் இயற்கைப் பாதுகாப்பான கவசம் ஒன்றும், இயற்கை அணியான குண்டலங்கள் இரண்டும் இருக்கின்றன என்பதை நீ அறிவாயா?

கர்ணன்: ஸ்வாமீ! நான் அறிவேன்.

வேதியர்: (திடுக்கிட்டு) எவ்விதம் தெரியும்?

கர்ணன்: ஏன்? உம்மைப் போன்ற பெரியோர் சொல்லி இருக்கக் கூடாதா? அதனால் என்ன?

வேதியர்: வேறொன்றும் இல்லை. அவற்றை நான் பெற விரும்புகிறேன்.

கர்ணன்: இவ்வளவுதானா! எதற்கும் பயன்படாத இவற்றையா நீவிர் கேட்க வேண்டும்? மான்தோல், புலித் தோலாயினும் பயன்படும். என் தோல் அசுத்தமானதே. ஆயினும் உங்கள் விருப்பப்படி கொடுக்கிறேன்.

வேதியர்: (வியப்புடன்) கர்ணா! உன் எண்ணத்தை அறிந்தேன். என் பெருமையினால், நகத்தைக் கிள்ளுவதைப் போல் அதை எளிதில் பிரித்துவிடலாம். அதனால் உன் உடலில் உதிரத்தோற்றமோ, காயங்களோ, தழும்புகளோ ஏற்படாதொழியும். உன் விருப்பப்படியே சென்றுவா.

(கர்ணன் உள்ளே செல்கிறான். மறுபடியும் ஓர் அங்கியையும் இருகாதணிகளையும் வேதியரின் எதிரில் வைக்கிறான். வேதியர் அவைகளை ஆதரவுடன் எடுத்துக்கொள்கிறார்.)

கர்ணன்: *ஐயா! மன்னிக்கவும். என் எண்ணப்படி இவை தானத்திற்கேற்ற பொருள்களல்ல. ஆதலால் உம் கைகளிற் கொடுக்க நான் விரும்பவில்லை.*

வேதியர்: *கர்ணா! நீயே உத்தம தானவீரன். தோல்போன்ற இவற்றை அறுத்து உடலினின்றும் பிரித்தமையினால் நீ கர்ணன் என்ற பெயரின் பொருளிற்கும் பொருத்தமானாய். உன் உடலின் ஒளி என்றும் குன்றாது பன்மடங்கு அதிகமாக வீசும்.*

கர்ணன்: *தம் ஆசிகட்கு நன்றி. ஆனால் என் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படவில்லையே! வேறு எதையாவது கேளுங்கள். உணவருந்தலாமா?*

வேதியர்: *கர்ணா! உன் மனதின் பண்பு என்னைத் திகைக்க வைக்கிறதே! நான் யாரென்பதை அறிந்தால் நீ திடுக்கிட்டுப் போவாய்.*

கர்ணன்: *பெரியோரே! எவரளித்தாலும், எவருக்களித்தாலும் கொடையொன்றுதான். கொடுப்பதிலும், பெறுவதிலும் கூடவா உயர்வு தாழ்வு? நீர்வேட்கை, பசி, துயில் இவற்றில் வேற்றுமையுண்டா? நீவிர் விண்ணுலகின் தலைவனான தேவேந்திரனாயினும் நான் வியப்படையேன்.*

வேதியர்: *ஆ, ஆ! என்ன கூறினாய்! உன் உள்ளத்தின் போக்கிற்கு எதிரில் உண்மையை மறைத்து என்னால் நிற்கவோ, பேசவோ முடியவில்லை. நான் தேவேந்திரனே. நீ சுயநலமற்ற வீரன். நான் சுயநலப் பித்தன்*

நான் ஏன் இவற்றை வேண்டிப் பெற்றேனென்பதை நீ அறிந்து கொண்டால் என்னைக் காணவும் வெறுப்பாய்.

கர்ணன்: தேவராஜனே! தம் அம்சங்கொண்ட அர்ஜுனன் என்னை வெல்வதற்கு இடையூறாயிருக்கும் இவற்றை என்னிடமிருந்து பிரிப்பதற்குத்தான் நீவிர் இங்கு வந்தமைக்குக் காரணம்.

தேவேந்திரன்: நீ யாரென்பதும் உனக்குத் தெரிந்து விட்டதா?

கர்ணன்: தெரிவதற்கு முன்பு இருந்த நிலைமையைக் காட்டிலும் சிறிது தாழ்ந்தே இருக்கிறேன்.

தேவேந்திரன்: (தனக்குள்) சூரியனுடைய காட்சி உனக்குக் கிட்டிவிட்டது போலும். எல்லாவற்றையும் அறிந்த பிறகா இக்கொடையளிப்பு! இதற்கு நான் நன்றிபாராட்டாது சென்றால் மனிதனாகக் கூடக் கருதப் படேன். (வெளிப்படையாக) தானவீரா! உன் கொடை என் மனதை உருக்கிவிட்டது. நீ கேட்பது எதுவாயினும் அளிப்பேன். வேண்டியதைக் கேள்.

கர்ணன்: தேவராஜனே, பிறருக்குக் கொடுப்பது ஒன்றையே நான் அறிந்திருக்கிறேன். பிறரிடமிருந்து எதையும் வேண்டுவதை நான் அறியேன். ஆயினும் ஒருவருடைய உத்தரவு ஒன்று எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மறுக்க எனக்கு இயலவில்லை. அதன்படி உம்மிடமிருந்து நான் ஒன்றைக் கேட்டு வாங்கும் நிலைமையில் இருக்கிறேன். எவனையும் மாய்க்கக் கூடிய வேலாயுதம் ஒன்று தம்மிடம் இருக்கிறது. அதை எனக்குத்

தரும்படி வேண்டுகிறேன். முடியுமாகில் அதைத் தர லாம். வேறு எதுவும் எனக்கு வேண்டாம்.

தேவேந்திரன் : (தனக்குள்) என்ன இது! வலது கையால் கரும்பலகையில் எழுதியதை இடது கையால் அழித்து விட்டேனே! (பெருமூச்சுவிட்டு) நம்மாலாவதொன்றும் இல்லை! எல்லாம் ஈசன் செயல். இந்தத் தானவீர னிடம் நான் சொல் மாறுவது எங்ஙனம்? (வெளிப்படை யாக) இதோ! தந்தேன். பெற்றுக்கொள். ஆனால் ஒன்று நினைவிலிருக்கட்டும். எந்த எதிரியையும் கொல் லக்கூடிய இவ்வேலாயுதம் ஓர் எதிரியைத்தான் கொல் லும். பிறகு பயன்படாதொழியும்.

(கொடுக்கிறான்.)

கர்ணன் : நன்றி.

(பெற்றுக்கொள்கிறான்.)

தேவேந்திரன் : நம்முடைய சந்திப்பு இந்திர ஜாலவித்தை யினால் ஏற்பட்டதைப்போல் மறையும். இதை வெளி யிடாது இருப்பாய்.

கர்ணன் : அப்படியே.

(தேவேந்திரன் செல்கிறான்.)

காட்சி 7.

கர்ணன் பூஜையறையில் வீற்றிருக்கிறான்.

(கண்ணன் சந்தடியின்றி நுழைகிறான்.)

கர்ணன் : (பரபரப்புடன் எழுந்து) வருக. ஏது இந்த அற்பனுக்கு இவ்வளவு பாக்கியம்! என் கண்களையே நான் நம்ப முடியாது திகைக்கிறேன்.

கண்ணன் : காந்தம் இரும்பை இழுப்பதில் விந்தை என்னப்பா இருக்கிறது! உன் உயர் குணங்கள் எதிரியை வசப்படுத்தும் வாய்ப்புப் பெற்றவை.

கர்ணன் : அஃதெல்லாம் எதற்கு! எந்த எண்ணமாயினும் சரி, தம் வருகை என்னைப் புனிதனாக்கி விட்டது.

கண்ணன் : தேவர்களின் வருகையினால் முன்பே புனிதமாக இருக்கையில் பெருமை என்னை எவ்வாறு சாரும்!

கர்ணன் : அதெல்லாம் எப்படித் தமக்குத் தெரியும்? புவியில் என் ஆருயிர்த் தோழனுக்குக்கூடத் தெரியாமலல்லவோ வைத்திருக்கிறேன். நீர் அதிசயப்பிறவி.

கண்ணன் : பல நாட்களாக நான் வெளியிடாது மறைத்து வைத்திருந்த ஓர் உண்மையை இனித் தாமதிக்காது வெளியிட வந்திருக்கிறேன்.

கர்ணன் : ஏற்கனவே விளங்கியுள்ள உண்மைகளால் என் உள்ளத்தில் மகிழ்வு ஏற்படவில்லை. ஏன் இவற்றை அறிந்தேன் என்ற வருத்தம் தான் மிச்சம். வேறு உண்மையை அறியப்போவதால் என்ன அதிகமான பயன் ஏற்பட்டு விடப் போகிறதோ! சொல்லலாம்.

கண்ணன் : கர்ணா! (உன் சகோதரர்களான) பாண்டவர்கள் நற்குணம் பெற்றவர்கள் என்று உனக்குத் தெரியும். அவர்கள் உன் தோழனான துர்யோதனனின் சூழ்ச்சியினால் வருந்துகின்றனர் என்பதையும் நீ அறிவாய்.

கர்ணன்: கண்ணா! ஒன்றைச் சொல்லி விடுகிறேன். என்னுடைய வாழ்க்கை பிறருடைய வாழ்க்கையினின்றும் முற்றிலும் மாறுபட்டது. விலங்குகளிலும் கடையனாயிருந்து, மனிதனாகி, அரசனாகி, வீரனாக நான் மாறிய

தைப் போல் மற்றவர் இல்லை. பாண்டவர் தந்தையை இழந்திருக்கலாம். துன்பப்பட்டிருக்கலாம். அவர்கள் துயரத்தை என் துயரத்துடன் ஒப்பிடுவதற்கு உமக்குத் துணிவு உண்டா? அந்த நிலைமையில் இருந்த என் உள்ளத்தில் வாழ்க்கைப் பற்றே அற்றுப் போயிற்று. சில லக்ஷியங்களின் உயர்வை உலகிற்கு நிரூபித்துக் காட்டவே என் வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துகிறேன். அவற்றில் ஒன்று நட்பு. அதைப் பெற்ற துர்யோதன மன்னனைப் பற்றியதாயின் எந்தச் செய்தியும் என் செவிகளுள் புகமாட்டாது. வேறு செய்தி இருந்தால் சொல்லலாம்.

கண்ணன்: கர்ணா! இது உறுதிதானா?

கர்ணன்: கர்ணனுக்கு இருமுறை பேசத் தெரியாது.

கண்ணன்: உன் தாய் வந்தால் என்ன செய்வாயோ?

கர்ணன்: தக்க வரவேற்பு அளிப்பேன்.

கண்ணன்: நீ உன் செயலிற்கு வருந்தும் காலம் தொலைவில் இல்லை.

கர்ணன்: முன்வைத்த காலைப் பின் வாங்குவதும், சொன்ன சொல்லை மாற்றுவதும், செய்தபின் வருந்துவதும் வீரருக்கழகல்ல.

கண்ணன்: நான் சென்று உன் தாயை அனுப்புகிறேன்.

கர்ணன்: விருப்பம் போல் செய்க.

(பிரிகின்றனர்.)

காட்சி 8.

அதே அறை கர்ணனும் குந்தியும்

(ஆடையால் உடலையும் முகத்தையும் மூடிக்கொண்ட ஒரு பெண்மணி நுழைகிருள். கர்ணன் பார்த்ததும் பரபரப்புடன் எழுந்திருக்கிருன்.)

கர்ணன்: யாரம்மா நீங்கள்? எங்கு? வந்தீர்கள் ஆசனத்தில் அமருங்கள். அந்தப்புரத்திற்குச் செல்கிறீர்களா? அல்லது என் மனைவியை அழைக்கட்டுமா?

பெண்: அப்பா! முதலில் எவரும் உள்ளே வரக்கூடாதென்ற தடையை ஏற்படுத்து. பிறகு நான் அமருகிறேன். மனைவியை அழைத்துவிடாதே.

கர்ணன்: எவரும் அனுமதி பெருமல் உள்ளே நுழையமாட்டார். அச்சமின்றி உட்காரலாம். ஏன் இவ்வளவு அதிர்ச்சி! கண்களில் நீர் பெருகுகிறதே!

பெண்: என் வாழ்க்கையே துயரக் கதையப்பா! அழாது என் செய்வேன்?

கர்ணன்: என்னைவிடவா? ஆனல் பெண்கள் மலர்போன்ற உள்ளம் படைத்தவர்கள். அதிர்ச்சியைத் தாங்கமாட்டார்கள். அம்மணீ! என்னுல் அதைத் தணியச் செய்ய முடியுமானல் உதவுவேன். தாயின் அன்பையே அறியாத எனக்கு ஏனே உங்களைப் பார்த்ததும் விளக்க முடியாத உணர்ச்சி ஏற்படுகிறது. விரைவிற் சொல்லுங்கள். என்னுல் பொறுக்க முடியவில்லை.

பெண்: கர்ணு! மலர்போன்ற மனம் என்று சொன்னையப்பா! அது உண்மையல்ல. கல்லினும் கொடிய

நெஞ்சைப் படைத்தவள் நான் என்பதை உணர்வாய். நான் யாரென்பதை முதலில் தெரிந்துகொள்.

(முகமூடியை எடுத்தெறிகிருள்.)

கர்ணன்: (அருவருப்பும், வியப்பும் கலந்த நிலையில்) ஆ! ஆ!! குந்திதேவியா! என் தோழனின் பகைவர்களின் அன்னையா! தேவி! நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? வேறு யாரோ மங்கை என்றல்லவா என்னென்னவோ பேசிவிட்டேன். (கடுமையாக) வந்த காரணத்தைக் கூறலாம்.

குந்தி: பெற்றெடுத்த தாய்க்குக் காட்டும்முறை இது தானு?

கர்ணன்: (சிறிது தயங்கி) எவனுக்கு எவள் தாய்?

குந்தி: உனக்குத் தெரியாவிட்டால் இப்பொழுதாவது தெரிந்துகொள். உன்னைப் பெற்றெடுத்த தாய்தான் எதிரில் நிற்கிருள்.

கர்ணன்: (பரிகாசமாக) பால் குடியாது தொண்டை வறட்சியடையும் என்ற எண்ணத்துடன் ஓடோடி வந்தனையோ?

குந்தி: தாயிடமுமா பரிகாசப் பேச்சு!

கர்ணன்: விலங்குகளிற்கூட இந்தமாதிரித் தாய்மாரைக் காண இயலாது.

குந்தி: ஆம். நன்கு சொன்னுய். அன்றும் உள்ளத்தில் விலங்குத் தன்மை நிறைந்திருந்தது. இன்றும் உன்னிடம் இச்சொற்களைக் கேட்டுக்கொண்டிருப்பதிலும் அத்தன்மை நிறைந்துள்ளது.

கர்ணன்: ஏன் வீண்பேச்சு? எதற்காக வந்திருக்கிருய்? தாயாம்! உலகில் உள்ள பெண்கள் எல்லாரும் தாய்கள். அந்தமுறையில்தான் நீயும் தாய்.

குந்தி: மைந்தா! அன்றுமுதல் இன்றுவரை எவரிடமும் வெளியிடமுடியாது உள்ளத்திற்குள்ளேயே அடக்கிக் கொண்டு எரிந்து வருந்தியது ஈசனுக்குத்தான் தெரியும்.

கர்ணன்: ஓ! ஓ!! இன்றுதான் ஞானோதயம் ஏற்பட்டு மைந்தனைக் காணவந்தீர்களோ!

குந்தி: ஐயோ! அருமை மைந்தா! நான் தற்கொலை செய்துகொள்ளவும் முயன்றேன். என் சூழ்நிலையில் வேறொருவர் இருந்தால் என்ன செய்திருப்பார்? யோசித்துப்பார்.

கர்ணன்: மைந்தனைக் கொலைசெய்யத் துணிந்த மகா பாபியாக எவரும் இருந்திருக்கமாட்டார்.

குந்தி: ஈசா! என்ன அபாண்டச் சொல்! பேழையில் உன்னைவிட்டு, காப்பவருக்குச் செல்வத்தையும் அதில் வைத்து நீரில் பேழை மூழ்காமலிருக்க வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தேன். மேலும் எவரிடம் பேழை சிக்கிற்று என்பது போன்றவற்றை விசாரித்து அறிய எனக்குத் துணிவு ஏற்படவில்லை. இரகசியம் வெளி வந்துவிடுமோ என்று அஞ்சினேன்.

கர்ணன்: தேர்ப்பாகர் இல்லாவிடில் கர்ணனுடைய பெயர் உலகிலேயே மறைந்திருக்கும்.

குந்தி: தெய்வானுக்கிரகம் பெற்ற உனக்குக் கேடேற் படாது என்று என் மனதில் மட்டும் நம்பிக்கை இருந்தது.

கர்ணன். இன்றுதான் மைந்தனைக் காணச் சந்தர்ப்பம் கிடைத்ததோ!

குந்தி: ஐயோ! விதியே! நீதான் என் மைந்தனென்று இவ்வளவு நாட்களாக நான் அறிந்ததில்லை. அந்தக் கண்ணன் இன்றுதான் என்னிடம் இதைச் சொன்னான்.

கர்ணன்: கண்ணனின் சூழ்ச்சிகளின் பொருளை அறிய முடிவில்லையே! கண்ணனுக்கு இது எப்படித் தெரிந்தது! எப்போது தெரிந்தது!

குந்தி: கண்ணனின் லீலைகளை எவர் அறியக்கூடும்!

கர்ணன்: அதிருக்கட்டும், வந்த காரணம் என்ன?

குந்தி: தாய் மகனிடம் எதற்கு வருவாள்? மகனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்குத்தான்.

கர்ணன்: மகனுக்குத் தனிவீடு இருந்துவிட்டால் என்ன செய்வது!

குந்தி: உண்மைதான். எல்லா மகன் வீடுகளிலும் தாய் இருக்கமுடியுமோ! நீ அங்கு வர மறுத்தால் மீதி மைந்தர்களுடன் உன் வீட்டிற்கு வந்துவிடுகிறேன்.

கர்ணன்: (குதித்தெழுந்து) ஆ! ஆ!! என் லக்ஷ்யத்தைச் சிதறடையச் செய்து விட்டாயா? அவர்களிடம் செய்தியைக் கூறிவிட்டாயா என்ன?

குந்தி: கூறியிருந்தால் எனக்கு முன்பு அவர்கள் இங்கு வந்து உன் காலடிகளிற் கிடக்க மாட்டார்களா? உன்னைப்போல் உடன் பிறந்தோருடன் சேருவதற்கு ஆராய்ச்சி செய்வார்களா?

கர்ணன்: நல்ல காலம்தான்! தாயே, தம் விருப்பத்தைப் பூர்த்தி செய்துவைக்க முடியாது. வேறு ஏதாகிலும் கேளுங்கள்.

குந்தி: ஏனப்பா முடியாது! இதுதான் நீ கற்ற கல்வியின் விளைவோ? அன்னைக்குக் காண்பிக்கும் கடமை இது தானே?

கர்ணன்: என்னை வளர்த்த அன்னையிடம் நான் எவ் விதம் நடந்துகொள்கிறேன் என்பதைக் கவனியுங்கள்.

குந்தி: என்ன சொன்னாய்! நான் உன்னைப் பாதுகாக்காது போனமையினால் என்னிடம் உனக்குக் கடமை எதுவும் இல்லையென்றெண்ணினாயோ! மகாபாபம் செய்தாலும், தாயை விலக்கக் கூடாதென்று நீ அறியாயா? நான் பெற்ற மைந்தனின் வாயிலிருந்து இந்தக் கடுஞ்சொற் களைக் கேட்பதற்காகவா இங்கு வந்தேன்! கண் ணன் இதை என்னிடம் சொல்லாமலே இருந்திருக்கக் கூடாதா!

(அழுகிறாள்)

கர்ணன்: (கண்களைத் துடைத்துக்கொண்டு) தாயே! நான் செய்தது தவறுதான். என்னை மன்னித்தேன் என்று கூறிவிடுங்கள்.

(கால்களிற் பணிகிறான்)

குந்தி: (மகிழ்வுடன்) இப்போதுதான் என் மைந்தனானாய். நீ என்னைத் தொடர்ந்துவா. இல்லாவிடில் இப்பொழுதே சென்று உன் தம்பிகளை உன்னிடம் அழைத்துச் சேர்த்துவிடுகிறேன்.

(புறப்பட முயலுகிறாள்)

கர்ணன்: தாயே! மன்னியுங்கள். இரு முறைகளையும் ஏற்க என் மனம் ஒரு நாளும் ஒவ்வாது. வேறெதையாகி லும் நீங்கள் கேட்கலாம். நான் நிறைவேற்றத் தயார்.

குந்தி: வேறெதுவும் எனக்கு வேண்டாம். மைந்தனைவிட எதையும் நான் உயர்ந்ததாகக் கருதமாட்டேன்.

கர்ணன்: தாயே, அன்னையிடம் மறைக்கக் கூடியது ஒன்றும் இல்லை. ஒன்றை நீங்களே நடுநிலைமை வகித்துச் சொல்லுங்கள். தாய் தந்தையரை அறியாதவன் என்றும், ஊர் பேரற்றவன் என்றும், உற்றார், பங்காளிகள் அற்றவன் என்றும், தொத்து நோய்க்காரனைப் போல் மக்கள் என்னைப் புறக்கணித்தனர். இகழ்ந்தனர். சபையில் எனக்கு நான்கு பேருக்கிடையில் உட்காருவதற்குக் கூட உரிமையில்லையென்று சொல்லி விட்டனர். கற்பதற்கும் உரிமையை மறுத்தனர். இவையெல்லாம் என் பிழைகளல்ல. நீங்களே எவர் பிழை என்று அறிந்து கொண்டிருப்பீர்கள். அந்நிலையிலிருந்த என்னை ஒரு கருணை வள்ளல் ஆதரித்தான். அவன் பாரத நாட்டின் நிகரற்ற சக்கரவர்த்தியின் இளவரசனான துர்யோதன மன்னன். அந்த மன்னனை மறத்தலே மகாபாபம். அதிலும் அவனுடைய எதிரிகளோடு கலந்து, என் நண்பன் உள்ளத்தில் வேரூன்றியுள்ள, பாண்டவர் வெற்றி என்னும் மரத்தை எரிக்கவா துணிவேன்! ஒரு நாளும் இல்லை. மறுமுறை இதைப்பற்றிப் பேசாதீர்கள். பிறகு உயிரற்ற உங்கள் மைந்தனுடைய சரீரத்தைத் தான் நீங்கள் காண்பீர்கள்.

குந்தி: என் தலைவிதி அப்படியிருந்தால் நீ என்ன செய்வாய்! ஒரே நேரத்தில் காகம் இரு புறங்களையும் காணுதலைப் போல், ஒரே நேரத்தில் உன்னையும் மற்றவரையும் சேர்ந்து பார்க்கும் பாக்கியம் எனக்கு ஒழிந்தது, போகட்டும். பெற்ற தாயின் விருப்பத்தை நிறைவேற்றாது மற்றவர்கட்கு எல்லாவற்றையும் கொடுத்த பெருமை உனக்கிருக்கட்டும்.

கர்ணன் : அப்படிச் சொல்லாதீர்கள். வேறு எதை வேண்டுமாகிலும் கேளுங்கள்.

குந்தி : (சிறிது தயங்கி) என் மைந்தர்களும் உன் சகோதரர்களும் ஆன ஐவரையும் கொல்வதில்லை என்று வாக்குக் கொடு.

கர்ணன் : தாயே! எதைக் கேட்டாலும் எவருக்கும் கொடுக்கத் தயங்காத நான் தங்கள் விஷயத்திலா மறுப்பேன்! ஒருநாளும் இல்லை. தங்கள் விருப்பம் நிறைவேற்றப்படும். ஆனால் சிறிது விதிவிலக்குடன் தான். உங்கள் மைந்தர்களுள் அர்ஜுனனல்லாத மற்ற நால்வரையும் நான் கொல்வதில்லை. அர்ஜுனனைக் கொல்வதை, அல்லது அவனால் கொல்லப்படுவதை என் வாழ்க்கை லக்ஷ்யமாகக் கொண்டிருக்கிறேன். அதை மாற்றுமாறு நீங்கள் கேட்டால் மைந்தன் உயிரற்ற பிணமாகி விடுவான்.

குந்தி : அவ்வளவு உன் பகையைப் பெறுவதற்கு என் கண்மணி அர்ஜுனன் என்ன கேடு செய்தான் அப்பா!

கர்ணன் : உயர்ந்த வீரனாக இருப்பதொன்று போதாதா? இரு கடவுள்கள் உண்டா! இரு அரசர்கள் ஆட்சிபுரிய முடியுமா! இரு சூரியர்கள் வானில் விளங்க முடியுமா!

குந்தி : ஐயோ! இந்தப் பொறாமை ஏன் உனக்கு!

கர்ணன் : இது பொறாமையன்று. இது இயற்கை. நான் ஒன்று கேட்கிறேன். உங்கள் உள்ளத்தில் என்னைப் பாதுகாக்கவேண்டும் என்று மைந்தன் பாசம் தூண்டியா நீங்கள் என்னிடம் வந்தீர்கள்? ஒருபோதும் இல்லை. அவ்விதமாகில் உடனே தர்மனிடம் சொல்லியிருந்திருப்பீர்கள். தர்மன் இங்கு ஓடோடி வந்திருப்பான். வேறு

ஒருவனுடைய தூண்டுதலினுலேயே இங்கு வந்திருக்கிறீர்கள். அர்ஜுனனைப் பற்றி உங்களுக்குக் கவலையில்லை. அவன் என்னிடம் தோல்வியடைய மாட்டான் என்ற நம்பிக்கையுண்டல்லவா! வலிமையற்ற மீதி மைந்தரைப் பற்றிய கவலையினுலேயே வந்திருக்கிறீர்கள். என் வாழ்வைப் பற்றியோ சாவைப் பற்றியோ அதிகமான கவனம் உங்களுக்கு இல்லை.

(குந்தி பேசாது இருக்கிறுள்.)

தாயே! நாண வேண்டாம். கூடப்பழகிய அவர்களுடன், இன்றுதான் தெரிந்துகொண்ட நான் சமமாக முடியுமா! நீங்கள் விதியை மாற்றமுடியாது. பாண்டவர்கள் ஐவர் தான். அறுவர் இல்லை. அர்ஜுனன் இறந்தால் நான் மற்றவருடன் சேர்ந்துகொள்வேன். என்றும் உங்களுக்கு ஐந்து புதல்வர்கள் தான்.

குந்தி: மைந்தா! நேரமாயிற்று. உன்னுடன் விருப்பப்படி பேசுவதற்குக்கூட எனக்கு உரிமையில்லை. விதியை ஒட்டியே அன்று என் மதி உன்னை நட்டாற்றில் விடத் தூண்டிற்று. அதே விதிதான் உன் மதியை இவ்விதம் பேசச் செய்கிறது. ஐயோ! நீங்கள் அறுவரும் சேர்ந்து வாழ்ந்தால் அப்பெருமையை நான் தாங்காது ஹிருதயம் வெடித்துச் சாவேனே! தாயின் உள்ளத்தைத் தனயன் அறியமாட்டான் என்பதை உண்மையாக்கி விட்டாய். என் கடமையைச் செய்துவிடுகிறேன். உனக்கு வேண்டுவதைக் கேள்.

கர்ணன்: தாயே! அது என் உரிமை. கேட்டுப் பெற்றே தீருவேன். போர்க்களத்தில் நான் எந்த நிலையிலும் உங்கள் மைந்தர்கள் நால்வரைக் கொல்ல மாட்டேன்;

ஒருக்கால் நான் அர்ஜுனனால் கொல்லப்பட்டு இறக்க நேரிடின், நீங்கள் என் உடலின்மேல் விழுந்து மைந்தன் என்பதை உலகிற்கு அறிவிப்பீர்கள். க்ஷத்திரிய வீரன் கர்ணன் தாயையறியாது வாழ்வில் பட்ட சிறுமைகள் புகழுடலையாவது பற்றாதொழியட்டும். நான் வென்றால், நேராகத் தங்கள் திருவடிகளிற் பணிந்து ஆசியைப் பெறுவேன்.

குந்தி: இதுதானா! ஏனப்பா இந்த எண்ணம்! இப்பொழுதே நீ என் மைந்தனென்று உலகிற்கு விவரித்தால் என்ன தவறு?

கர்ணன்: அதையும் சொல்லிவிடுகிறேன். அது வெளியானால், நான் எவ்வளவுதான் உள்ளன்புடன் பழகினாலும் என் தோழன் மனதில் ஐயங்கள் தோன்றக்கூடும். அல்லது என் சங்கட நிலைமையைத் தவிர்ப்பதற்காகப் போரையே நிறுத்தி தர்மருடன் சமாதானம் செய்து கொண்டாலும் கொள்வான். அப்பொழுது என் வாழ்க்கை லக்ஷ்யமான அர்ஜுனனுடன் போரிடுதல் இல்லாதொழியும். நான் ஒரு லக்ஷ்யப் பித்தன். வாழ்க்கைப் பித்தனல்லன். இல்லாவிடில் ஒவ்வொரு இடத்திலும் விதியை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைமை ஏற்படாது.

குந்தி: அவ்வளவுதான் என் பாக்கியம்.

(மைந்தனை நன்றாகப் பார்க்கிறாள்.)

மறுபடியும் இந்த இன்பம் கிட்டுமோ கிட்டாதோ! எவர் அறிவர்! செல்கிறேன்.

(பிரிகின்றனர்)

காட்சி 9.

போர்க்களத்தில் தனி இடம்

கர்ணனும் துர்யோதனனும்

கர்ணன்: நண்பா! நாம் ஒன்று நினைக்க விதியின் எண்ணம் வேருகவல்லவோ இருக்கிறது! நாம் அதைப் பற்றி வருந்திப்பயனில்லை. நம்முயற்சியில் குறையில்லாமல் இருந்தால் சரி.

துர்யோதனன்: மனிதனை ஏதாவது ஒரு கண்ணை இழந்தேயாக வேண்டும், எதை இழக்கிருய் என்ருல் அவன் என்ன சொல்வான்? நீ போர் புரிந்தால் பாட்டன் பீஷ்மர் போர் புரியமாட்டார். அவர் போர் புரிந்தால் நீ போரிடமாட்டாய். இதற்கு விமோசனமே இல்லையா?

கர்ணன்: என்மேல் தவறிருந்தால் சொல். நான் ஏற்கிறேன்.

துர்யோதனன்: நண்பா! உன்னைத் தவருகச் செல்பவன் என்று எவர் சொல்லக்கூடும்! என்விதி அவ்வளவு தான்.

கர்ணன்: அவ்வளவு பெரிய சபையில், உயர்ந்த வீரர்களின் நடுவில் என்னை சாமான்யப் போர்வீரன் என்று பீஷ்மர் கூறியபோதே என் இருதயம் வெடிக்காமலிருந்தது எனக்கே விந்தையாக உளது. அவர் அங்ஙனம் கூறலாமா?

துர்யோதனன்: மூப்பில் அறிவு மங்கிவிடும் என்ற கூற்றில் எனக்கு நம்பிக்கை இல்லாதிருந்தது. இன்று அது உண்மை என்பதில் நம்பிக்கை கொண்டேன்.

கர்ணன்: முதியவர்கட்கு ஓய்வு கொடுத்து அனுப்பவேண்டியது அரசின் கடமை. அதைச் செய்வதற்கு உனக்கு மன உறுதி வரவில்லை.

துர்யோதனன்: கர்ண! நீ தெரியாதவனைப் போலல்லவா பேசுகிறாய்! எனக்கு அரசுரிமை முற்றிலும் கிடைத்தபாடில்லை. அரசுரிமை என் தகப்பனுக்கு உளது. அவரோ பெயரளவில்தான் அரசர். பீஷ்மர் துரோணர் முதலியவர்களுடைய கைப்பதுமை அவர். நான் பீஷ்மரை விலக்க முயன்றால் பெரும்பான்மை வீரர்கள் அவரோடு சேர்ந்து என்னிடமிருந்து விலகக்கூடும்.

கர்ணன்: அதுமட்டுமா! எதிரியின் கட்சியை வலிமை பெற்றதாகவும் ஆக்கக்கூடும். நீ என்ன செய்வாய்!

துர்யோதனன்: அதுமட்டுமல்ல. பரசுராமரின் மாணாக்கனை பீஷ்மரின் போர்த்திறமை சாமான்யமானதன்று.

கர்ணன்: நானும் அதை ஏற்கிறேன். அதற்காகப் பிறரிடம் இகழ்ச்சி மனப்பான்மை கூடுமா? கடல் ஆழத்தில் பெருமை கொண்டால், ஹிமாலயம் உயரத்தில் பெருமை கொள்ளலாமே!

துர்யோதனன்: அதற்குத்தான் நீ நல்ல விடையளித்தாயே! அவருட்பட எவருடனும் தனிமையிற்போர் புரிந்து வெற்றியை நிலைநாட்ட முடியும் என்று வீரநாதம் செய்தாயே!

கர்ணன்: செய்தென்ன பயன்! என்னை மேலும் நாணும்படியாகவல்லவோ சபையில் செய்துவிட்டார்.

துர்யோதனன்: விராட நகரப்போரிலும், கானகத்தில் கந்தர்வர்களிடமிருந்து என்னை விடுவிக்கப் போர்புரிந்த போதும், திறமை தெரிந்து விட்டதென்று சொன்னார்.

அது இருக்கட்டும். கர்ணா! எனக்குக்கூட விந்தையாகவே இருக்கிறது. ஏன் அந்த இருபோர்களிலும், திரௌபதியின் மணத்திலும் நீ அர்ஜுனனை வெல்லாது திரும்பினாய்?

கர்ணன்: ஒரு வீரன் கொண்ட கோட்பாட்டை இப்பொழுது விளக்குவேன். வீரர்கள், எதிருக்கெதிராக நின்று ஒருவர் இறந்து மற்றவர் மாத்திரம் உலகில் வாழவேண்டும் என்று அறிவித்து விட்டுப் பிறருதவியின்றிப் போர் புரிந்தால்தான் கொலை செய்யலாம் என்பது பெரியோர் பாதை. முன்னறிவிப்பில்லாத அந்நேரங்களில் கொல்வது எனக்கு இயலாத செயல்.

துர்யோதனன்: காரணம் எதுவாயின் என்ன? என் வெற்றிப் பாதைக்கு ஏதேதோ முட்டுக்கட்டைகள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன.

கர்ணன்: இடையூறின்றிக் கிடைக்கும் வெற்றி இன்பமளிக்காது. ஒரு தனிக்குதிரை எவ்வளவு வேகமாக ஓடினாலும் புகழ் கிட்டாது. பலவற்றிற்கிடையில் சிறிது முன்னேறினாலும் புகழப்படும்.

துர்யோதனன்: தடைகளைக்கருதி நடுங்கும் பேதை நானல்லன். முடிவிலாவது வெற்றி கிடைத்தால் போதும்.

கர்ணன்: அதைப்பற்றிய கவலையை ஒழிக்க. பீஷ்மரே அர்ஜுனனை வென்றுவிட்டால் உன் விருப்பம் நிறைவேறி விடும். அது முடியாவிடில் நான் இதோ இருக்கிறேன் அப்பொறுப்பை ஏற்பதற்கு. எனக்குத்தான் அர்ஜுனனை என் கைகளால் கொல்லும் சந்தர்ப்பம் கிட்டாமற் போய்விடுமோ என்ற கவலை உள்ளத்தில் ஊன்றியுள்ளது.

துர்யோதனன்: பரிலவனத்திலும், கனவுலகிலும் சஞ் சரிக்கிறேன். சிதருமல் முன்னேறுவேனு! கர்ணு! உன் மேலோ பீஷ்மர் முதலியவர் மேலோ வருந்தி யாது பயன்? பகைமையையும் பொருமையையும் உள்ளத்தில் விதைத்து கர்வம், சினம் என்னும் நீரால் வளர்த்தால் இன்பப்பழம் எப்படிக் கிட்டும்! உம்! உம்! இனியா, இந்த நிலேயிலா, இந்தப் பருவத்திலா, நற்புத்தி தோன்ற வேண்டும். அடுத்த பிறவிக்காவது இது பயன்படட்டும்.

(செல்கின்றனர்.)

காட்சி 10.

துர்யோதனனும் துரோணரும்

துர்யோதனன்: ஆச்சார்யா ! பாட்டனுரை நம்பி நல்ல பயனேப் பெற்றது உமக்குத் தெரியும். ஐயோ! பாபம்! இந்தத் தள்ளாத வயதில் அம்புக் கட்டிலில் படுத் துறங்குகிருர். இன்னமொரு கிழவரான உம்மிடம் நான் ஒன்றையும் எதிர்பார்த்து விடவில்லே. ஆயினும் ஆசிரியருக்குக் காண்பிக்கும் கடமையைப் பெரிதாகக் கருதி சேனேத் தலேமையை உமக்களித்தேன். தினங் கள் கழிந்தன. முன்னேற்றத்தை மட்டும் காணவில்லே.

துரோணர்: இளவரசே! நன்றியுணர்வு மனிதருக்கு அவசி யம். பீஷ்மரை வெல்பவரும் உலகில் உண்டா? வேண்டு மென்றே போரில் சாய்ந்த அவரையா தூற்றுகிருய்!

துர்யோதனன்: அவர் எப்படிப் போரில் சாய்ந்தால் எனக் கென்ன! எனக்குத் தோல்விதானே; அவரைச் சொல்

வித்தான் பயனென்ன? கண்ணனையே ஆணையை மீறச் செய்ததொன்று போதாதா! ஒவ்வொருவரும் ஒவ் வொரு காரணத்தை வைத்துக்கொண்டு மனமொவ்வா மலே போர் புரிகின்றனர். மரம் வாழைதான், கத்தியும் கூர்மைதான். வெட்டுபவனுடைய கை அசையாவிட் டால் என்ன செய்யலாம்? என் விதி தடையிடுகிறது.

துரோணர்: ஏன் அப்படிச் சொல்கிருய்?

துர்யோதனன்: நீரோ, கர்ணனோ, அர்ஜுனனைத் தவிர மற்ற பாண்டவர்களைக் கொல்வதற்குப் பல சந்தர்ப்பங் கள் கிடைத்த போதிலும், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாது விட்டிருக்கிறீர்கள். பீஷ்மரும் அப்படியே செய்திருக்கிருர்.

துரோணர்: நீ சொல்வது உண்மையே. அவ்வைவருள் ஒருவர் இறப்பின் மற்றவர் இறப்பது என்ற ஒப்பந்த முண்டென்பதை நீ அறிவாயா?

துர்யோதனன்: தெரிந்தமையிஞல் தான் நம் எண்ணம் எளிதில் நிறைவேறும் வழியை நீங்கள் புறக்கணித்த மைக்கு வருந்துகிறேன்.

துரோணர்: வீரமன்ரு! பீமனைத் தவிர மற்றெவருடனுவது கதைப் போரிட நீ விரும்புகின்ருயா?

துர்யோதனன்: விரும்பமாட்டேன். கதைப் போரின் பெரு மையை அறிந்தவர் நிகரற்றவரைக் கண்ணுலும் எடுத் துப் பார்க்கமாட்டார். சமமானவனுடன் போர்புரிந்து மாளுவது உயர்ந்ததென்பது என் கொள்கை.

துரோணர்: எந்த வீரனும் அர்ஜுனனுடன் போர் புரியும் சந்தர்ப்பத்தை நழுவ விடமாட்டான். அந்தச் சுத்த வீரனுடைய போர்த்திறனை நேரிற்கண்டு மகிழாது,

அவனைச் சகோதரருடைய சாவிற்காகத் தற்கொலை புரியுமாறு விடுவதற்கு நான் ஒப்பமாட்டேன். மேலும் சிங்கம் தன்னைக் கண்டு அஞ்சிப் பதுங்கும் மான்களையா எதிர்த்துப் போரிடும்! தாழ்ந்தவரைக் கொல்லாது மன்னித்து விடுதலே என்போன்றோர்க்கு அழகு.

துர்யோதனன்: காரணங்களென்னவோ ஒழுங்காகத்தான் உள. முடிவுதான் எனக்கு அனுகூலமாகவில்லை.

துரோணர்: மாணவா! உன்னை ஒரு முக்கிய விஷயத்திற்காக அழைத்தேன். அதைச் சொல்ல மறந்துவிட்டேன்.

துர்யோதனன்: ஆசார்யா! சொல்லலாம்.

துரோணர்: பீமனுடைய மகன் கடோத்கஜன் என்பவன் உயர்ந்த வீரன். தேவரருள் பெற்றவன். அவனை மாத்திரம் மனிதருள் எவரும் வெல்ல முடியாது. அவன் மனிதரைப் பொருளாக மதித்துப் போரிட முன் வரமாட்டான். அவ்விதமாகில் நாம் பிழைத்தோம். இல்லையேல் எல்லோரும் அழியவேண்டியதுதான். நான் என் முழு வலிமையையும் காண்பித்துச் செய்தபோரினால் பாண்டவர்கள் கடோத்கஜனைப் போரிடத் தூண்டிவிடுவார்களோவென ஐயமுறுகிறேன். அவ்விதம் நேரிடுமாகில் ஒரே வழிதான் உண்டு.

துர்யோதனன்: தம்மால் முடியாத அவ்வழியை அறிந்தவன் யார்?

துரோணர்: நான் உறுதியாகக் கூற முடியாது. ஆயினும் ஊகித்து ஒரு விஷயத்தைக் கூறுகிறேன். பீஷ்மரும் நானும் கூட எதிர்த்து நிற்க முடியாத அர்ஜுனனுடன் போர் புரியும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கும் கர்ணனிடம் ஏதோ விசேஷமான தெய்வாம்சம் பெற்ற

அஸ்திரம் ஒன்று இருப்பது உண்மை. அதை இப்பொழுதே எடுத்துத் தயாராக வைத்துக்கொள். கடோத்கஜன் வந்தானென்று நான் அறிவித்ததும், நீ அதை உபயோகித்து விட வேண்டியதுதான். செல்.

துர்யோதனன்: நம் எதிரி அர்ஜுனனேயன்றி, கடோத்கஜன் அல்லவே?

துரோணர்: மறுநாள் பிழைத்திருந்தாலல்லவா, அர்ஜுனனை எதிர்க்கலாம். சொல்வதைக்கேள். செல்.

(பிரிகின்றனர்.)

காட்சி 11.

துர்யோதனனும் கர்ணனும்

துர்யோதனன்: (அன்புடன் தழுவிக்கொண்டு) தோழா! என்றும் கோபத்தீயின் இடையில் கொதித்துக் கொண்டிருந்த என் உள்ளம் இன்றுதான் ஏதோ அமிர்தக் கடலில் மூழ்கியதைப்போல் இன்பமடைகிறது. எனக்கு வெற்றியைப் பற்றிய கவலையேயில்லை. என் தோழனின் முழுப் போர் வலிமை இன்று மக்களைத் திகைக்க வைக்கப் போகிறது. இன்னும் உயிருடன் இருக்கிற பீஷ்மக் கிழவர் கூடத் தன் தவறுதலுக்காக வருந்தப் போகிறார். என் உயிர், பொருள், உடல் எல்லாவற்றையும் உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன். பூலோக சூரியனைப் போல் விளங்கப் போகிறாய்.

கர்ணன்: (பெருமூச்சு விட்டு) இவ்வளவு நாட்களாக உள்ளத்தில் எண்ணியவற்றைச் செயலில் காட்டும் காலம் நெருங்கி விட்டது. பொறுப்புணர்ச்சி அதிகமாகி

விட்டது. உயிரினும் உயர்ந்தவனாகி விட்ட நண்பனுக்கு நான் செய்யவேண்டிய கடமையைக் காண்பிக்கும் நாள், நான் வெகு காலமாக எதிர்பார்த்த நாள் வந்து விட்டது. ஆனால் என்ன பயன்! நண்பா! என்னை இறக்கைகளை இழந்த பறவையாக்கி விட்டாயே! என் செய்வேன்?

துர்யோதனன் : ஏன் அவ்விதம் கூறுகின்றனை? உன் குறையைக் கூறு. இப்பொழுதே நிறைவேற்றி வைக்கிறேன்.

கர்ணன் : உன்னால் முடியாத செயல் அது. என் உயிர் ஆயுதமான வேலாயுதத்தை அந்த அற்பன் கடோத்கஜனுக்காக அழிக்கச் செய்தனையே! ஆ! அதுமட்டும் இருந்தால் இந்த அர்ஜுனனை மும்மூர்த்திகள் சேர்ந்து வந்தாலும் காக்க முடியாதே!

துர்யோதனன் : நன்கு சொன்னாய்! அன்றிரவு நீயும் நானும் எல்லோரும் அழிந்திருக்கவேண்டும் என்பதை மறந்தனையோ! எல்லோரும் அன்று உன்னை எவ்விதம் வாழ்த்தினர் என்பதை நீ அறியாய். கல்மாரியினால் நகரமே அழிந்திருக்குமே.

கர்ணன் : நண்பா! என்னுடைய அழிவைப்பற்றி நான் வருந்தவில்லை. என் வாழ்க்கைக் குறிக்கோள் அர்ஜுனனைக் கொல்வது. அது நிறைவேறி விட்டால் பிறகு கடலில் மூழ்கவும் நான் தயார்.

துர்யோதனன் : உன்னிடம் வேலாயுதத்தைப் போன்ற பல உதவிப் பொருள்கள் இருப்பது உறுதி.

கர்ணன் : இருக்கலாம். உயர்வு தாழ்வில்லையா! பார்க்கலாம்.

துர்யோதனன் : ஏன் இன்னமும் உன் மனதில் ஐயம் இருக்கிறது?

கர்ணன்: ஏனோ! கேள், எவ்வளவு முயன்றாலும், தெய்வம் நமக்கில்லை யென்பதை நீ அறியவில்லையா!

துர்யோதனன்: ஆம், ஆம். பீஷ்மரும் துரோணரும் அடைந்த முடிவே அதற்குச் சான்றாகும். அதைப்பற்றி இப்பொழுது ஏன் கவலைப்படவேண்டும்?

கர்ணன்: அர்ஜுனனைவிட நான் உயர்ந்தவனாயிருக்கலாம். கிருஷ்ணனைப்போன்ற தேர்ப்பாகனுக்கு நாம் எங்கே செல்வது? எப்படியாவது ஒரு நல்ல சாரதிமட்டும் கிடைத்துவிட்டால்!

துர்யோதனன்: இல்லாததற்கு என்ன செய்யலாம்!

கர்ணன்: இருக்கிறான். ஆனால் கிடைக்கமாட்டான்.

துர்யோதனன்: யார் அது?

கர்ணன்: சல்ய மகாராஜன் தான்.

துர்யோதனன்: ஏன் கிடைக்கமாட்டான்?

கர்ணன்: கண்ணன் அன்பினால் அர்ஜுனனுக்குச் சாரதியானான். சல்யராஜன் எந்த அன்பினால் நமக்குச் சாரதியாவான்? வேறு விதியின்றி நம்முடன் சேர்ந்த சல்யராஜன் நம்மிடமிருந்தே நமக்குக் கேடு விளைவிக்காமலிருந்தால் அதுவே பெரும் உதவியாகும்.

துர்யோதனன்: நண்பா! சல்யராஜன் சாரதியாகவேண்டும் என்கிறாய். அவன் கிடைத்ததாக எண்ணிக்கொள்.

கர்ணன்: எப்படி? எனக்கு விளங்கவில்லையே!

துர்யோதனன்: அர்ஜுனனுக்கு நீ நிகரானவன் என்பது எல்லோரும் அறிந்தது. கண்ணனுக்குச் சல்லியன் நிகரானவன் என்ற பெரும் புகழ் அவனுக்கு என்று கிடைக்கும்?

கர்ணன்: உண்மை; ஆனல் கண்ணனின் காலடியில் அடிமையாக அர்ஜுனன் கிடப்பதைப்போல் சல்ய னிடம் நான் நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவன் கேட்டுவிட்டாலோ!

துர்யோதனன்: முன்யோசனை இருந்தாலொழிய சல்ய ராஜன் அப்படிக் கேட்கமாட்டான். கேட்டால் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்!

கர்ணன்: தன்கையே சில நேரங்களில் கண்ணைக் குத்து வதும் உண்டு. என் வேண்டுகோள் அங்ஙனம் எனக் குத் தீதாகாது இருக்கவேண்டும்.

துர்யோதனன்: உடனே சல்யராஜனை அனுப்புகிறேன்.

(செல்கின்றனர்.)

காட்சி 12.

கர்ணன் தானவீரன்

(கர்ணன் சோர்வுற்றிருக்கிறான்.)

கர்ணன்: ஆ! மனித முயற்சியினல் ஆகாதது ஒன்றும் இல்லை என்று இறுமாப்புக் கொண்டிருந்தேன். எவரை நொந்து யாது பயன் கிட்டப்போகிறது. விதி எதிராக இருக்கையில் எவர் என்ன செய்யக்கூடும்?

சீ! சீ! என்ன பேதமை!! நானு கோழையைப்போல் விதியைத் திட்டுவது! விதி என்ன செய்யும்!

மதியால் விதியை எதிர்த்துப் போராடினேன். மதி என்னவென்று நான் ஆராயாதிருந்து விட்டேன். ஒரு செயலைப் புரிந்தபின் அதன் தீமைகளினின்று தப்புவ தற்கு முயலும் ஆராய்ச்சியோ மதி? முதலிலேயே நலம் எது? தீது எது?என்று எச்சரிக்கும்எண்ணம் அல்லவோ மதி.

நற்குணங்கள் எவ்வளவு இருந்தும் சுயநலப்பற்று ஒன்று இருந்தால் எல்லாக் குணங்களும் வீணுகிவிடுகின்றன.

நான் சுயநலப் பித்தனல்லனென்று மனதைத் தேறச் செய்தேன். ஆனால் அது சரியன்று.

எந்த நண்பனுடைய இன்பமும் துன்பமும் என்னுடையவையே எனக் கருதினேனே, அவன் சுயநலப் பித்தன் அல்லவா! அவனுடைய சுயநலப்பற்றின் தீவினை என் முயற்சிகளைக் காலாக்கினியைப் போல் எரிக்காது போமா?

அமிர்த கலசத்தில் ஒரு துளிவிஷம் கலந்தால் அமிர்தத்தின் பயன் எதிரிடையாக மாறிவிடுமன்றோ!

ஐயோ! என் வாழ்க்கையைக் கலப்பற்ற தூய பாதையிற் செலுத்தியிருக்கக்கூடாதா?

நண்பனை துரியோதனனை நல்ல பாதையிற் செல்லுமாறு செய்ய முடியவில்லையே! நான் ஏன் அதிலேயே சென்றேன்?

இயற்கையும் செயற்கையுமான எவ்வளவு எச்சரிக்கைகள் எனக்குக் கிடைத்தன. ஒன்ரு இரண்டா? அருமைப் பிதா சூரியனும், இந்திரனும், பிரம்மனும் கொடுத்த எச்சரிக்கைகள் ஒன்றிற்காவது செவி சாய்த்தேனு?

பரசுராமர் சாபம் கொடுக்குமாறு கடைசி நாளிலா பூச்சி கடிக்கவேண்டும்?

பசுவின் கன்று சாவதற்கு என் தேரா காரணமாக வேண்டும்?

குற்றமற்ற அபலை பாஞ்சாலியை விலங்குகட்கும் கேடான முறையில் துர்யோதனன் தீண்ட ஏவினனே! நான் ஏன் சும்மா இருந்தேன்?

அருமைப்பிதா சூரியனே செய்த எச்சரிக்கையை ஏற்றேனு?

இந்திரனிடம் பெற்ற அவ்வேலைக் கடோத்கஜன்மீது ஏன் வீசினேன்?

குந்தியின் அழைப்பை ஏற்றுப் பாண்டவருடன் சேர்ந் தேனு? அவளுக்கு மீதி மைந்தர்களைக் கொல்வதில்லை என்ற வாக்கை ஏன் அளித்தேன்?

எம்பெருமான் கண்ணன் வரவை மதித்து நடந்தேனு?

பீஷ்மரின் எச்சரிக்கையில் சினங்கொண்டேன். அவர் சாய்ந்ததும் துரோணர் மாண்டதும் எச்சரிக்கைகளன்ருே!

கடைசியில் என்னைக் கெடுக்க சல்யனைத் தேர்ப்பாக ஞக வேண்டினேன்.

என்ன அநியாயம்! அடிமேல் அடிபட்டால் அம்மியும் நகருமன்ருே! அடிக்கடி நான்பெற்ற தோல்விகளை மட்டும் கூறியும் அர்ஜுனனைப் புகழ்ந்தும் சல்யன் என்னைப் பேடி யாக்கி விட்டானே! அது மட்டுமா! தொடுத்த நாகாஸ் திரத்தை அக் கள்ளக் கண்ணன் பயன்படாதவாறு செய்து விட்டானே!

காலால் தேரைத் தரையில் அமிழ்த்துவதற்கு அவன் என்ன அரக்கனு?

அவன் மேல்தான் என்ன குற்றம்! அவனும் என்னை எச்சரிக்கவில்லையா!

மறுபடியும் மார்பை நோக்கி விடுமாறு அந்த நாகம் வேண்டிற்றே!

அப்போது ஒருமுறை தொடுத்த அஸ்திரத்தை மறு முறை உபயோகிக்க மாட்டேன் என்று மறுத்தது யார்? நான்தானே!

பிரம்மாஸ்திர மந்திரத்தின் தொடக்கம், தக்க நேரத்தில் நினைவிற்கு வராமல் இடையூறு செய்கிறதே?

இந்த நேரத்திலா தேரின் சக்கரம் தரையில் பதிய வேண்டும்?

தேர் தரையிற் பதிந்ததே என்று சல்யனும் மறைந்தான்.

ஆ! ஆ! என்ன விந்தை! திகைத்துப் போய்த் தேரைத் தரையில் நிறுத்துவதற்கு முயலும் என்மேல் எங்கும் தடை பெறாத அர்ஜுனனால் தொடுக்கப்பட்ட உயர்ந்த அஸ்திரங்கள், சிறிதும் படாது திரும்புகின்றனவே! இது ஒரு நன்மையோ!

சீ! என் அறிவைத் திட்டவேண்டும். நடுக்கடலில் கப்பலினின்று விழுந்து மாயப்போகும் மனிதன் ஒரு சிறு பலகையைக் கண்டு மகிழ்வதைப் போலல்லவா இது உளது. இதுவா காக்கப்போகிறது?

(கண்ணன் வருகிறார்.)

(தனக்குள்) என்ன! கர்ணனுடைய தானமல்லவா தானம். அந்தத் தான பலன்கள் உள்ளவரை கர்ணனைக் காலதண்டமோ, என் சக்கரமோ, சிவபெருமானின் நெற்றி விழித்தீயோ எதையும் செய்ய முடியாது. அதற்கு ஒரு வழி செய்கிறேன்.

(கர்ணனைப் பார்த்து)

தானவீரா! கதிரவனைப்போல் என்றென்றும் உன் புகழ் விளங்கட்டும்.

கர்ணன் : ஐயா! தாம் யார்? தர்மராஜனையே கலங்க வைக்கும் இந்தப் போர்க்களத்தில் எதை வேண்டி வந்தீர்? ஏன் வந்தீர்? இங்குக் கொடுக்கப் பொருள் எதுவும் இல்லையே!

கண்ணன் : இங்கு உள்ளதையே வேண்டுவேன். மறுக்க மாட்டாயே?

கர்ணன் : ஏன் ஐயம்?

கண்ணன் : தானவீரா! எவரும் அளிக்க முடியாத தானங்களை அளித்திருக்கிறாயே! அவற்றின் பயனை எனக்கு அளிப்பாயா?

கர்ணன் : என்னிடம் கொடுக்கக்கூடிய ஒன்றும் இருக்கிறதா? இதோ! தந்து விடுகிறேன். தண்ணீர்! தண்ணீர்! ஆ! ஆ! இங்கு தண்ணீர் ஏது? இதோ, இடத்துக்கேற்ற தண்ணீர்.

(அம்பால் தொடையைக் குத்துகிறான். உதிரத்தை ஏந்திப் 'பெறுக' என்று கண்ணன் கையில் விடுகிறான்.)

கண்ணன் : சுயநலமற்ற தானவீரா! உனக்கு நிகர் நீயே. உன் ஆசிரியர் பரசுராமர் கூடத் தன் புண்ணிய பலனை வேறு வழியின்றி ராமருடைய அம்புக்கு இரையாக்கினார். அவர் பூதவுடலால் சிரஞ்சீவியானார். நீ புகழுடம்பாய் சிரஞ்சீவியாக விளங்குவாய்.

கர்ணன் : ஆ! ஆ! கண்ணா! இதெல்லாம் என்ன?

ராகம் : சாருகேசி — **தாளம்: ஆதி**

வான் பெற்ற நதி கமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்
தேன் பெற்ற துழாயலங்கற் களப மார்புந்
திருப்புய முந்தை வந்து தீண்டப் பெற்றேன்
ஊன் பெற்ற பகழியினாலழிந்து வீழ்ந்தும்
உணர்வுடனின்திரு நாம முரைக்கப் பெற்றேன்
யான் பெற்ற பெருந்தவப் பேறென்னையன்றி
இருநிலத்திற் பிறந்தோரில் யார் பெற்றாரே!

[அர்ஜுனனுடைய அம்புகள் பாய்ந்து கர்ணன் சாய்கிறான். குந்தி புலம்பலுடன் ஓடி வருகிறாள்.]

[குந்தி தன் மகனின் தலையை எடுத்து மடிமீது வைத்துக் கொண்டு புலம்பல்.]

குந்தி: ஆ! ஐயோ மகனே! பெற்ற வயிறு துடிக்கிறதே. உன்னை இனி எப்பொழுது காணப்போகிறேன். பெற்றெடுத்த பிள்ளையைப் பேணாத பாவி நான்.

மகனே! குருவம்ச சிம்மாசனத்துக்கு நீயே தகுதி வாய்ந்தவன். உன் தம்பிமார் ஐவரும் துர்யோதனன் முதலாயினோரும் உன்னுடைய ஆட்சிக்கு உட்பட்டு வாழ்ந்திருக்க வேண்டியது. அந்த வாய்ப்பு உனக்கு அமையவில்லை.

[இச்சமயம் துர்யோதனன் ஓடிவருதல்]

துர்யோதனன்: ஆ! நண்பா.

[என்று ஓடிவந்ததும் கீழே குனிந்துள்ள குந்தியைப் பார்த்து]

துர்யோதனன்: போர்க்களத்தில் ஒப்பாரி வைக்கும் தாங்கள் யாரோ?

[குந்தி நிமிர்ந்து பார்த்தல்]

குந்தி: (எழுந்து நின்று) மைந்தா! உன் நண்பனைப் பெற்றெடுத்த தாய் நான்தானப்பா! நான் என் தந்தையின் இல்லத்தில் கன்னியாக இருந்தபொழுது கதிரவனுடைய மந்த்ரசக்தியால் இம்மைந்தனைத் தோற்றுவித்தேன். உலகத்தவர் பழிப்பார்களே என அஞ்சி எவரும் அறியாமல் நான் பெற்ற இச்செல்வத்தைப் பெட்டியில் வைத்துக் கங்கை ஆற்றில் விட்டுவிட்டேன். பிறகு இவன் எங்கு, எப்படி வளர்ந்தான் என்பது எனக்குத் தெரியாது.

துர்யோதனன்: தாயே! இவ்வுண்மையை இவ்வளவு நாட்களாக ஏன் மறைத்து வைத்தீர்கள்?

குந்தி: இக்கர்ணன்தான் நான் ஆற்றில் விட்ட மகன் என்று சில நாட்களுக்கு முன்பு கிருஷ்ணன் எனக்கு விளக்கினன். பாண்டவர்களோடு சேரும்படி நான் இவனைக் கூப்பிட்டேன். ஆனல் இவனே உனக்காக என்றே உயிர்கொடுக்கத் துணிந்திருப்பதாகவும் இவ்வுண்மையைத்தான் சாகும்வரையில் யாருக்கும் சொல்லலாகாது என்றும் என்னை வேண்டிக்கொண்டான். அவன் வேண்டுதலுக்கு இணங்கியது ஒன்றே இவனுக்கு நான் செய்துள்ள தாய்க் கடமையாகும்.

துர்யோதனன்: "ஆ! நண்பா! இத்தகைய நட்பை, இத்தகைய தியாகத்தை இனி நான் யாரிடம் காண்பேன்? எனக்காக உயிர்கொடுத்துள்ள உன்னைப் பிரிந்து நான் மேலும் இம்மண்ணுலகில் வாழ்ந்திருப்பது முறையா?

கண்ணன்: உத்தமவீரன் கர்ணன்,

அனைவரும்: வாழ்க.

கண்ணன்: தானவீரன் கர்ணன்,

அனைவரும்: வாழ்க.

கண்ணன்: தியாகமூர்த்தி கர்ணன்,

அனைவரும்: வாழ்க.

A... 2835
LIBRARY KOV

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய மிகச் சிறிய நூல்கள்

மாணுக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிருர்களா?	...	1-25
சைவன் யார்?	...	1-25
ஆலய வழிபாடு	...	1-25
ஆத்ம சக்தி	...	1-25
மனிதனது நிஜ சொரூபம்	...	1-25
சிவதத்துவம்	...	1-25
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
கணபதி	...	1-00
நன்நெறிகளும் அருள் வாக்குகளும்	...	0-80
சூரிய நாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
முருகக் கடவுள்	...	0-75
வர்ணச்ரம தர்மம்	...	0-70
தாயுமான சுவாமி ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
விஷ்ணு தத்துவம்	...	0-50
விவேகானந்தரின் வீரகர்ஜனை	...	0-40
கந்தர் அனுபூதி	...	0-30

விவரங்களுக்கு:

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115

சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய
பெரிய நூல்கள்

திருவாசகம்	ரூ.	32-00
ஸ்ரீமத் பகவத்கீதை 16-ம் பதிப்பு	...	28-00
ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (தமிழ் வியாக்கியானம்)	...	26-00
ஞானயோக விளக்கம்	...	15-00
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
மஹாபாரதம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	8-00
விவேகானந்த விவரணம்	...	7-50
இராமாயணம்	...	7-00
அனுஷ்டான வேதாந்தம்	...	7-00
விவேகானந்த உபநிஷதம்	...	7-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசமஞ்ஜரீ	...	6-50
தாயுமானசுவாமி பாடல்கள்	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
தினசரி தியானம்	...	5-00
அம்பிகையின் ஆயிரம் திருநாமங்கள்	...	4-50
விஷ்ணுவின் ஆயிரம் திருநாமங்கள்	...	4-00
சகோதரி நிவேதிதை	...	3-75
சுவாமி விவேகானந்தர்	...	3-50
பஜனைப்பாடல்கள்	...	3-50
எதிர்கால இந்தியா	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	3-00

விலை ரூ. 2-50